

தேவியின்
கண்மணி
ஆர்.மணிமாலா
ரூ.7
"என் பிரியசகி"

# "என் பிரியசகி"

**1**

**வ**ந்து நின்ற அவளை வித்தியாசமாய் பார்த்தார் அந்த பள்ளியின் வாட்ச் மேன்.

அந்த சூழ்நிலைக்கும், இடத்துக்கும் ஒட்டாத பெண்.

கசங்கியிருந்த, சாயம் போன பருத்தி சேலை. எண்ணை வழிய இறுக்கமாய் போடப்பட்டிருந்த பின்னல். வியர்த்துக் கொட்டியதால் நிறத்தை மட்டமாக்கி காட்டிய மாநிறம். முகம் நிறைய பதற்றம்.

''யாரிவள்... புதிதாய் தெரிகிறாளே!''

வாட்ச் மேன் தணிகாசலம். இன்னும் ஐந்தே நிமிடத்தில் பள்ளி விடப்போகும் நேரம் நெருங்குவதால் தன் பணிகளில் கவனமாய் இருந்தாலும் அவள் மீதும் ஒரு கண் பதித்திருந்தார்.

அது... சென்னையில் பிரபலமான பள்ளி. சுத்தம், சுகாதாரம், படித்த திறமையான ஆசிரியர்கள், தரமான கல்வி, மாணவர்களின் திறனறிந்து... அந்தத்துறையில் ஊக்குவித்து உபதிறமையை வளர்ப்பது என்று நல்ல பெயர் வாங்கியிருந்ததால் அங்கு அட்மிஷன் கிடைப்பதே அரிதாய் இருந்தது.

''பீஸெல்லாம் நடுத்தர வர்க்கம் நினைத்தே பார்க்க முடியாத உயரத்தில் இருந்தது. அதனால் அங்கு படிக்கும் மாணவர்களின் தொண்ணூறு சதவீதம் பேர் காரில் தான் வருவார்கள்''.

கேட்டுக்கு வெளியே, பரந்து விரிந்திருந்த மைதானத்தில் கார்களும், பைக்குகளும் ஆட்டோக்களும் காத்திருந்தன.

அவள் புடவைத் தலைப்பின் நுனியை அவ்வப்போது தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் விழிகள் உன்னிப்பாய் பிள்ளைகள் வரும் வாசலையேப்பார்த்துக் கொண்டிருந்தன.

தணிகாசலத்தின் மனதில் சந்தேகம் எழுந்தது.

பள்ளியை பெருக்கி சுத்தம் செய்யும் பார்வதி காலி பக்கெட்டுடன் அவரைக் கடந்துச் சென்றாள்.

''பார்வதி...''

''என்னண்ணா?''

''இங்கே வாயேன்!''

வந்தாள்.

''அதோ... அவளைப் பாரேன்!''

''யாரு அந்த பச்சைப் புடவை கட்டியிருக்கிறப் பொண்ணையா?''

ஆர். மணிமாலா



''ஆமாம்!''

''என்ன அவளுக்கு?''

''அவளை இதுக்கு முன்னே இங்கே பார்த்திருக்கியா?''

''இல்லையே... ஏன் கேக்கிறே?''

''அவ முகமே சரியில்லே பார்வதி. கண்ல திருட்டுத் தனம் தெரியுது. அடிக்கடி முந்தானையைத் தொட்டு பார்த்துக்கறா. நீ போய் பீட்டரையும், வடிவேலுவையும் வரச் சொல்லேன். இவளை கவனிக்கணும். பெல் அடிச்சதும் என் பார்வையிலிருந்து விலக வாய்ப்பிருக்கு.''

''பார்த்தா... ஒரு மாதிரியா தான் தெரியுது. இரு... நான் போய் கூட்டியாறேன்.''

* * *

பிற்பகலின் வெயில் மூர்க்கமாகவே இருந்தது. வியர்வை வழிய சைக்கிளில் கொரியர் கொண்டு செல்லும் இளைஞர்கள், பைக்கில் பயணித்த வாலிபர்கள், முதுகில் புத்தக மூட்டையைச் சுமந்த மாணவர்கள் என அந்த நேரத்திற்கே உரிய பரபரப்பு மந்தமான மதிய தூக்கத்தை கடந்து வந்திருந்தது.

ஹேமா பதற்றத்துடன் வாட்ச்சில் நேரம் பார்த்தாள். பதறினாள்.

''பெல் அடித்து விட்டிருப்பார்களே... அபிலாஷ் காத்திருப்பானே''

''சீக்கிரம் போ மேன். எவ்ளோ லேட் தெரியுமா? பிள்ளை நான் இன்னும் வரலையேன்னு தவிச்சுக் கிட்டிருக்கப் போறான்.''

அம்பது வயது மூர்த்தி வேகத்தை அதிகப்படுத்தினார்.

''இன்னும்... இன்னும் வேகமாப் போ!''

எதிர்ப்பட்ட லாரிகளின் இடையே முதலாளியம்மாவை வைத்துக் கொண்டு படுவேகமாக காரோட்ட மனசு இடம் தரவில்லை.

''இன்னும் பத்து நிமிஷத்துல போய்டலாம்மா. ரொம்ப வேகமாப் போகக் கூடாதுன்னு ஐயா சொல்லியிருக்கார்.''

''அதை நீ சொல்லாதே... அடிக்கடி லீவுப் போட்டு உயிரை வாங்கறே. என் பிள்ளை காத்துட்டிருக்கப் போகிறான்.''

அவள் சொல்லி முடிக்கும் முன் கார் நின்றது.

''ஏன் நிறுத்தினே...?''

''தெரியலேம்மா. அதுவா நின்னுடுச்சு. இதோ பார்த்துடறேன். இறங்கி பானெட்டை நோக்கிப் போக...''நாசமாப்போச்சு'' என்று பொறுமையிழந்தாள்.

மூர்த்தி சங்கடத்துடன் அவள் முன் வந்து நின்றார்.

''என்ன?''

''பெட்ரோல் காலிம்மா!''

''யோவ்... அறிவில்லே உனக்கு? கார்ல பெட்ரோல் இருக்கா. இல்லையான்னு சரிபார்க்கிற வேலைக்கூட உன்னாலப் பார்க்க முடியாதா? நான் ஆட்டோ பிடிச்சுப்போய்க்கறேன். நீ வீட்டுக்கு வந்து கணக்கை முடிச்சுக்கிட்டுக் கிளம்பு. நீ சரிப்பட்டு வரமாட்டே!''

''அம்மா... அம்மா!'' மூர்த்தி கெஞ்ச, கெஞ்ச சாலையோரம் நின்றிருந்த ஆட்டோவில் ஏறிப் பறந்தார்.

அவளையே பரிதாபமாய் பார்த்த டிரைவர் பெருமூச்சு விட்டார்.

மூர்த்தி ஒரு வாரம் லீவுக் கேட்டிருந்தார். டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தவருக்கு உடல் வலியால் களைத்துப் போயிருந்தார்.

இன்று இன்னொரு டிரைவர் முத்துவேல் தன் தங்கைக்கு திருமணம் என்று லீவு போட்டு விட, வந்தே ஆகணும்னு வீட்டிற்கு ஆள் அனுப்பி வரச்செய்து விட்டாள். அவர் வரும் போதே பள்ளிக்குச் செல்ல தயார் நிலையில் இருந்தாள் ஹேமா.

ஏற்கனவே லேட்டு என்று குதித்தவள். உடனே காரில் ஏறி அமர புறப்பட்டாச்சு.

இதில் மூர்த்தி தவறு எங்கே?

''ஐயா வந்தால் சொல்லிக் கொள்ளலாம். அவர் புரிந்துக் கொள்வார்.''

★★★

ஒரே வகை பட்டாம்பூச்சிகள் குபுக்கென ஒட்டு மொத்தமாய் பறந்து வருவதுப் போலிருந்தது. யூனிஃபார்மில் குழந்தைகளைப் பார்க்கும் போது.

அவள் ஆவலோடுத் தேடினாள்.

''எங்கே... எங்கே அவன்?''

கண்கள் இப்படியும், அப்படியுமாய் ஆவலாய்த் தேட... சட்டென விழிகள் விரிந்தன.

''அதோ... அவன் தானே?''

துருதுரு விழிகளுடன், சுருட்டை கேசத்துடன், அவன் அப்பாவின் சாயலை கொஞ்சமும் விட்டு வைக்காமல் பிரம்மனிடம் கேட்டு வாங்கி வந்திருந்த சிறுவன் தன் அம்மாவைத் தேடினான்.

''அபிலாஷ்''

கிசுகிசுப்பான குரல் கேட்டுத் திரும்பிய அபிலாஷ் அந்த புதியவளை தலை சாய்த்துப் பார்த்தான்.

''நீங்களா ஆன்ட்டி கூப்பீட்டீங்க!''

''ம்...''

''என் பேர் உங்களுக்கு எப்படித் தெரியும். யார் நீங்க?''

'' உன்னை எனக்கு ரொம்ப நல்லாத் தெரியும். இந்தா.. இந்த சாக்லேட்டை சாப்பிடு!''

''ம்ஹூம் வேணாம்!''

''சாப்பிடு கண்ணா! ஊட்டி விட முயல...

கையால் உதறினான்.

''எங்க மம்மி யார் எதைக் குடுத்தாலும் சாப்பிடக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க!''

''ஏய்... யாரு நீ?''

அவளின் தோளில் பார்வதியின் கரம் வந்து விழுந்தது.

திடுக்கிட்டாள்.



## 2

அழுதழுது முகம் சிவந்து போயிருந்தாள் ஹேமா. இன்னும் அவளிடம் பதட்டமும், பயமும், கோபமும் அப்படியே இருந்தது.

அவனை மட்டும் வாட்ச்மேன் கவனிக்காமல் விட்டிருந்தால்... என் பிள்ளை இந்நேரம்...? ஐயோ...!'

ரைட்டர் சொன்ன இடத்தில் தணிகாசலமும், பார்வதியும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தனர்.

''எப்ப கூப்பிட்டாலும் விசாரணைக்கு வரணும்!''

''கண்டிப்பாங்க... அவளை விட்றாதீங்க!''

அபிலாஷை தன்னோடு சேர்த்து இறுக்கி அணைத்திருந்த ஹேமாவிடம் வந்தனர்.

''கம்ப்ளைண்ட் எழுதிக் கொடுத்துட்டோம்மா. நாங்க வர்றோம்!''

''போங்க... ஆனா உங்களையும் நான் சும்மா விடப்போறதில்லே. என் ஹஸ்பண்ட் வரட்டும். என்னய்யா ஸ்கூல் நடத்திறீங்க? பிள்ளைப் பிடிக்கறவல்லாம் ஈஸியா உள்ளே வர்ற அளவுக்கு இருக்கு உங்க லட்சணம். விடமாட்டேன்... கேஸ் போட்டு என்னப் பண்றேன் பார்!'' வெடித்தாள்.

அபிலாஷ் அம்மாவையே மிரட்சியுடன் பார்த்தான்.

தணிகாசலம் பார்வதியிடம் கண்களால், 'போய் விடலாம்' என்று சைகை காட்ட...

நகர்ந்தனர்.

''என்ன சார்... ஏதாவது சொன்னாளா?''

''இல்லே மேடம்... எவ்வளவு அடிச்சும் வாயேத் திறக்கமாட்டேங்கறா. அட்லீஸ்ட் பேரையாவது சொல்லலாமில்லே?''

''இவளை விட்றாதீங்க... பார்க்க பார்க்க ஆத்திரமா இருக்கு. கடத்தறதுக்கு இவளுக்கு என் பிள்ளை தான் கிடைச்சானா? நினைச்சுப் பார்க்கவே நடுங்குது சார்!''

புடவை கிழிந்திருக்கு, கன்னத்தில் ரத்தம் கட்டி கறுப்பாய் உறைந்தி



''ஏம்மா...! உன் கணவர் கத்தக்கத்த சூடு போட்டியாமே...!''

'' ஆமாம் டாக்டர்... அநாவசியமா கத்தாதீங்க...ன்னு சொன்னேன். அவர் கேட்கலை...!''

-எஸ்.மாரியப்பன், தேனி

ருக்க, உதடு கிழிந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது... அவளுக்கு.

லாக்கப்பில் இருந்தவள் மெல்லத் திரும்பி பெஞ்சில் அமர்ந்திருந்த ஹேமாவை கசப்பாய் பார்த்தாள்.

நல்ல சிவந்த நிறம், பார்லரின் உதவியோடு பட்டைத் தீட்டப்பட்ட அழகு. அவ்வளவு அழுதும் லிப்ஸ்டிக் அழியவில்லை. லிப்பில் அடைப் பட்டிருந்த கவரிங் செய்யப்பட்ட முடி, கையில்லா கருநீல நிறச் சுடிதார் அவள் கலரை மேம்படுத்திக் காட்டியது. முப்பது வயது என்று மாரியம் மன் கோவிலில் சத்தியம் பண்ணினால் கூட நம்ப முடியாத இளமை.

கோபத்துடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''சார் எப்ப வருவார் மேடம்? அவர் கிட்டே பேசிட்டு ஸ்ட்ராங்கா எஃப் ஐ ஆர் போட்றலாம்.

''பெங்களூர்ல இருக்கார். அவருக்கு தான் ட்ரை பண்றேன்... லைனே கிடைக்க மாட்டேங்குது''

''ரொம்பு நேரம் நீங்க இங்கே இருக்க வேணாம். புறப்படுங்க மேடம்... சார் வந்ததும் அனுப்பி வையுங்க!''

''தாங்க்யூ இன்ஸ்பெக்டர்... எப்படியாவது அவகிட்டேர்ந்து உண் மையை வரவழைச்சிடுங்க!''

''அது என் பொறுப்பு!''

அவள்... அபிலாஷையே பார்த்தாள்.

எதேச்சையாக அவளைப் பார்த்த அபிலாஷ் அம்மாவை இறுகக் கட் டிக் கொண்டான்.

''மம்மி... போய்டலாம் மம்மி... அந்த பூச்சிக்காரி என்னையேப் பார்க்கிறா!''

அடுத்த கணவே இன்ஸ்பெக்டர் அவள் கன்னத்தில் பளாரென அறைந்தார். விட்ட இடத்திலிருந்து விசாரணையைத் தொடங்கினார்.

★ ★ ★

ஹேமா குழந்தையை வாரி அணைத்த படி வெளியே வந்தாள்.

பிரிட்ஜில் வைத்த ஆப்பிளாய் சில்லென்றிருந்தது பெங்களூர்.

நகரின் பிரதான ஸ்டார் ஹோட்டலின் கான்ஃபரன்ஸ் ஹாலில் பிஸி னஸ் மீட்டிங்கில் இருந்தான் ஹரி. மிக முக்கியமான மீட்டிங் என்பதால் எந்த போன்காலும் தன்னை இடையூறு செய்து விடக்கூடாது என்று ஸ்ட் ரிக்ட்டாக ஆர்டர் போட்டிருந்தான் தன் பர்சனல் அஸிஸ்டன்ட் தாரிகாவி டம். அவனுடைய பர்சனல் செல்போன் உட்பட மூன்று செல்போன்க ளையும் அவளிடமே கொடுத்து, 'போன் வந்தால் நீயே சொல்லிவிடு... எக்காரணத்தைக் கொண்டும் என்னிடம் தராதே' என்று அறைக்கு வெளி யில் நிறுத்தியிருந்தான்.

ஆங்கில நாவலில் மூழ்கியிருந்த தாரிகா, எம்.டி.யின் பர்சனல் செல் போன் அலறி கவனத்தை திசைத் திருப்ப வைத்தது.

'பர்சனல் லைன்... பேசலாமா, வேணாமா?' தயங்கினாள்.

வெகுநேரமாய் ரீங்கரித்துக் கொண்டேயிருக்க, எடுத்துப் பேசினாள்.

''ஹலோ!''

''ஹலோ... யார் பேசறது?''



குரலின் அதிகாரம் வைத்தே புரிந்துக் கொள்ள முடிந்தது மேடம் என்று.

''மேடம்... நான் பி.ஏ. தாரிகா பேசறேன்!''

''நீ ஏன் இந்த போனை அட்டெண்ட் பண்றே?''

சொன்னாள்.

''சரி... உங்க எம்.டி. கிட்டேக் கொடு!''

''ஸாரி மேடம்... எந்த போன்கால் வந்தாலும் தரக்கூடாதுன்னு சார் சொல்லிட்டார்''.

''எவ்வளவு தைரியம் உனக்கு? மத்தவங்களும் நானும் ஒண்ணா? குடு முதல்ல...''

''ஸாரி மேடம்... மீட்டிங் முடிஞ்சதும் நானே பேசச் சொல்றேன். என்ன விஷயம்னு சொன்னீங்கன்னா நானே சொல்லிடறேன்''

''திமிர் தானே உனக்கு? வச்சுக்கறேன் உனக்கு...'' பட்டென எதிர் முனை துண்டிக்கப்பட உதடைப் பிதுக்கி தோள்களைக் குலுக்கிக் கொண் டாள் தாரிகா.

சரியாய் ஒரு மணி நேரம் கழித்து மீட்டிங் முடிய, டையை சரிபண் ணிக் கொண்டே வந்த ஹரி தமிழ்ப்பட நாயகனைப் போல் கம்பீரமாய், வசீகரமாய் இருந்தான்.

''எனி கால்ஸ் பார் மீ?''

'எஸ் சார்...''. என்று தொழில் சம்பந்தப்பட்ட போன் அழைப்புக ளைச் சொன்னவள் கடைசியாக, ''உங்க மிஸஸ்ும் போன் பண்ணினாங்க சார். அர்ஜன்ட் மேட்டராம். நான் உங்க கிட்டே போன் தரலேன்னு கோபப் பட்டாங்க சார்!''

''நியாயமான கோபம் தானே? எப்படி சமாளிக்கப் போறேனோ தெரி யலையே...'' பொய்யான பதைப்புடன் போனில் நம்பரைப் போட்டபடி நகர்ந்து ஜன்னலோரமாய் சென்றவரை சிரிப்புடன் பார்த்து விட்டு நாருக் காய் நகர்ந்தாள்.

''ஹலோ...''

''...?!''

''கோபப்படாதே ஹேமா... முக்கியமான மீட்டிங்கில் இருந்தேன்!''

''...''

''அவங்க மேல கோபப்படாதே! நான் தான் எந்த போன்காலும் தரக் கூடாதுன்னு சொல்லியிருந்தேன்''

''...''

''சின்னக்குழந்தை மாதிரி திரும்பத் திரும்ப அதையே சொல்லிட்டி ருக்காதே... என்ன விஷயம் சொல்லு!''

''...''

''எனக்கு இங்கே இன்னும் ஒரு வாரத்துக்கு வேலை இருக்கு. உடனே சென்னைக்கு வாங்கன்னு கூப்பிட்டா எப்படி?''

''...''

''அபிலாஷ்க்கா... என்ன ஆச்சு?'' துணுக்குற்றான்.

''...''

''யாரு? எப்ப?''

''...''

''அபிலாஷ் ஸேப்ட்டியா இருக்கானில்லையா? தேங்க் காட்! நான் வரவரைக்கும் அவனை ஸ்கூலுக்கு அனுப்பாதே!''

''...''

''ஒரு அக்ரிமெண்ட் கையெழுத்தாகணும் ஹேமா. உடனே வருவது சாத்தியமில்லை. எப்படியாவது ரெண்டு நாள்ல வரப்பார்க்கிறேன். அந்த போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு நான் இப்ப போன் பண்ணிடறேன். பயப்படாதே ஹேமா... எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். சரியா? ஓகே!''

போனை கட் பண்ணியவன் மனசு பதறியது.

'என் பிள்ளையை கடத்த முயன்றார்களா? அதுவும் பெண்ணா? யாரவள், எதற்காக?'

உடனே ஏரியா இன்ஸ்பெக்டருக்கு போன் போட்டான்.

## 3

இரண்டு நாட்கள் கழித்து பெங்களூரிலிருந்து திரும்பி வந்த கணவனை அணைத்துக் கொண்டு அழுதாள் ஹேமா.

''என்ன ஹேமா?''

''பயமாயிருக்குங்க... என் பிள்ளைய வெளியே அனுப்பவே பயமாயிருக்குங்க. கொஞ்சம் ஏமாந்திருந்தாலும் என் பிள்ளைய நான் மிஸ் பண்ணியிருப்பேன். அவளோட.... அதாங்க நம்ம பிள்ளைய கடத்தினாளே.. அவளோட முகம் என் கண்ணிலேயே நிக்குதுங்க? முகத்துல ஒரு ராட்சஷத்தனம். எப்படிப் பார்க்கிறாத் தெரியுமா? அவளை சும்மா விடக் கூடாது. வெளியே வர முடியாத அளவுக்கு பெரிய கேஸாப் போட்டு உள்ளே தள்ளச் சொல்லுங்க.''

''இன்ஸ்பெக்டர்கிட்டேயும், ஏசிக்கிட்டேயும் போன்ல பேசிட்டேன். அவளை நல்லா கவனிக்கச் சொல்லியிருக்கேன். கவலைப்படாதே... அபிலாஷ் எங்கே?''

''உள்ளே தான் இருக்கான்!''






ஹரி அறைக்குள் சென்றான். வீடியோ கேம்ஸ் விளையாடிக் கொண்டிருந்த அபிலாஷ் காலரவம் கேட்டு திரும்பியவன், ''டாடி'' என்று ஓடி வந்து அவன் கால்களை கட்டிப்பிடித்துக் கொண்டான்.

தூக்கி அணைத்துக் கொண்டவன் முகமெங்கும் முத்தமிட்டான்.

''அபிக்கண்ணா, என் செல்லக்குட்டி!''

''டாடி என்னை விட்டு எங்கேயும் போய்டாதீங்க டாடி!''

''ஏம்ப்பா?''

''பயமாயிருக்கு டாடி! என்னை யாராவது தூக்கிட்டுப் போயிடுவாங்க டாடி!''

''அப்படியெல்லாம் எதுவும் நடக்காது கண்ணா! டாடி இருக்கேன்ல?''

''ஸ்கூலுக்கு ஒரு பூச்சிக்காரி வந்து எனக்கு சாக்லேட் குடுத்து தூக்கிட்டு போகப் பார்த்தா டாடி!''

''அதைப்பற்றி நினைக்காதே அபி! டாடி பார்த்துக்கறேன்... நீ போய் கேம்ஸ் விளையாடு!''

''பார்த்தீங்களா... அபி ரொம்ப பயந்துப் போயிருக்கிறான். அவ எதுக்காக நம்மக் குழந்தைய கடத்த திட்டம் போட்டான்னு தெரியலே. அபின்னு பேர் சொல்லி கூப்பிட்டிருக்கா. அப்ப... நம்மக் குழந்தைய ரொம்ப நாளா வாட்ச் பண்ணி, டீடெய்ல்ஸ் கலெக்ட் பண்ணிட்டு தான் காரியத்துல இறங்கியிருக்கா.

அவ தனியாள் கிடையாது. பெரிய கூட்டமே பின்னாடி இருக்கணும்.

வாயத் திறந்து இதுவரைக்கும் ஒரு வார்த்தைக் கூட பேசலே...!''

''அபியைப் பார்த்துக்க ஹேமா! முதல்ல நீ தைரியமாயிரு. நான் இதை சும்மா விடப்போறதில்லே. குளிச்சிட்டு ஸ்டேஷன் வரை போய்ட்டு வர்றேன். டிபன் எடுத்து வை!'' குளியலறை நோக்கி நடந்தான்.

''நானும் வர்றேங்க...''

''வேணாம் ஹேமா. அப்புறம் கூடவே அபியையும் கூட்டிட்டுப் போகணும். அந்த லேடி, அந்த சூழல், அவனுக்கு பயத்தை இன்னும் அதிகப்படுத்தும்.''

''நீங்க சொல்றதும் சரி தான். ஆனா, அவளை என் கையால அடிக்கணும் போலிருக்குங்க... ஆத்திரமா வருது.''

''என்ன இப்ப... உனக்கு பதிலா நான் அடிச்சிடறேன்.'' குளித்து முடித்து சாப்பிட்டு விட்டுக் கிளம்பினான்.

யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் வாசலில் இவன் கார் வந்து நின்றதைப் பார்த்ததும், ''அப்புறம் பேசறேன், வச்சிடு'' என்று கட் பண்ணி விட்டு எழுந்து வந்தார்.

''வாங்க மிஸ்டர் ஹரி... பெங்களூர்ல இருந்து எப்ப வந்தீங்க?''

''இன்னைக்கு தான். வந்ததும் கிளம்பி வந்துட்டேன்.'' ''பிஸினஸ் எல்லாம் எப்படியிருக்கு சார்!''

''புதுசா ஒரு பிராஞ்ச் ஓபன் பண்றோம். அதுக்கான வேலையிலே தான் மும்முரமா இருக்கோம். அந்த சமயத்திலே தான் இப்படியொரு பிரச்னை. அதான் கிளம்பி வந்துட்டேன். அந்த லேடியப்பத்தி விஷயம் தெரிஞ்சதா?''

''இல்லே சார். நீங்க சொன்ன மாதிரியே பலமா கவனிச்சேன். அப்பக்கூட வாயேத் திறக்க மாட்டேங்கறா.''

''ஐ ஸீ!''

''ஸ்ட்ராங்கா ஒரு கேஸ் போட்ரலாம் சார். பிராஸ்ட்டிடியூஷன் போடலாம்னு நினைச்சேன். அதுக்கூட ஈஸியா வெளியே வந்துடலாம். அதனால் ப்ரவுன் சுகர் கடத்தினதா எஃப் ஐ ஆர் போட்ரலாம் சார். இருபது வருஷம் உள்ளேத் தள்ளிடலாம்.

''செய்யலாம் சார்... சும்மா விடக் கூடாது. எங்கே அவ... நான் பார்க்கலாமா?''

''ஷ்யூர்... யோவ் தங்கவேலு... லாக்கப்பை திற...''

தங்கவேலு என்கிற அந்த போலீஸ்காரருக்கு அதிசயமாய் தொப்பையே இல்லாமல் போலீஸ்காரராய் இருக்க வேண்டிய லட்சணமான உடற்பயிற்சி தேகத்துடன் கம்பீரமாய் இருந்தார்.

லாக்கப் பூட்டைத் திறந்ததும் உள்ளே நுழைய போன ஹரியைத் தடுத்தார்.

''அவளை வெளியே கூப்பிடலாம் சார்!''

''பரவாயில்லை இன்ஸ்பெக்டர்... நான் அவகிட்டே பேசிப் பார்க்கிறேன்.''

''அவகிட்டேயா... வாயை தைச்சி வச்சிருக்கா.''

''முயற்சிப் பண்ணுவோமே...!''

''சரி'' என்றார் இன்ஸ்பெக்டர்.

லாக்கப்பில் நுழைந்த ஹரி கெட்ட வாடைக்கு மூக்கை சுருக்கினான்.

பராமரிப்பில்லாத சிதிலமடைந்த சிமெண்ட் தரை. சுவற்றோரம் குவளையில் தண்ணீர். அந்த அறைக்குள்ளேயே ஒரு ஓரமாய் கழிப்பிடம். அதற்கு மூன்றடி தள்ளி அவள்!

கிழிந்த துணியாய் முதுகுக்காட்டிப் படுத்திருந்தாள். துணி விலகிய இடைவெளியில் பட்டைப் பட்டையாய் சிவந்திருந்தது. தரையில் ரத்தத் துளிகள் காய்ந்து... அருவறுப்பை தந்தது.

''தங்கவேலு அவளை எழுப்புய்யா!''

தங்கவேலு பூட்ஸ் காலால் அவளை எத்தினார்.

''ஏய்...ஏய் எந்திரி!''

''......''?

''எந்திரிங்கறேன்ல? நீ கடத்த நினைச்சியே... அந்தப் பையனோட அப்பா வந்திருக்கார். எத்தனை லட்சம் வேணுமோ கேளு...'' என்றார் கிண்டலாய்.

அவளிடம் முனகலுடன் கூடிய அசைவு!

இடது கை மணிக்கட்டு புஸ்ஸென்று வீங்கிப் போயிருந்தது.

வாசலில் சலசலப்பு கேட்டது. நான்கு போலீஸ்காரர்கள் மூன்று இளைஞர்களை அடித்து துவைத்தபடி இழுத்துக் கொண்டு வந்தனர்.

''தங்கவேலு... இங்கே வாய்யா!'' என்ற இன்ஸ்பெக்டரின் குரலுக்கு வெளியேறினார்.

மெல்ல எழுந்தமர்ந்து திரும்பியவளை நெற்றி சுருங்கப் பார்த்தான்.



முகத்தில் ஏகப்பட்ட காயம். வலதுப்பக்க புருவம் எட்டணா சைஸில் வீங்கிப் போயிருக்க... கண்களை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

அவனுக்காகவே எதிர்பார்த்து காத்திருந்தப் பார்வை.

ஆனால், அவனைத்தான் புரட்டிப் போட்டது அவளின் முகம்.

''இ...வ...ளா?'' அதிர்ச்சி என்றால், அப்படியொரு அதிர்ச்சி. அவளிடம் எந்த சலனமும் இல்லை.

''நீ...நீ... எப்படி இங்கே?''

''நா... நான் யாருன்னு யார்கிட்டேயும் சொல்லலே.... சொல்லவும் மாட்டேன்!'' என்றாள் நைந்த சன்னமானக் குரலில்.

அவளை அந்தக் கோலத்தில் பார்க்க பார்க்க பதறியது. வேதனை குரல் வளையை இறுக்கியது.

அங்கே அதற்கு மேல் நிற்க திராணியற்று இன்ஸ்பெக்டரிடம் வந்தான்.

''என்ன சார்... ஏதாவது சொன்னாளா?''

''கேஸ் எதுவும் போட வேண்டாம். கம்ப்ளைண்டை வாபஸ் வாங்கிக்கறேன்... அவளை விட்ருங்க?'' என்றான் ஹரி.

''என்ன சொல்றீங்க?'' என்றார் நம்ப முடியாமல்.

''அவளை விட்ருங்கன்னு சொல்றேன்'' என்றான் அழுத்தமாய்.

## 4

புது பிராஞ்ச், புது ப்ராஜெக்ட், அக்ரிமெண்ட், ஆபீஸ் என்று எந்நேரமும் அதே சிந்தனையாய் இருப்பவன்... இப்போது அத்தனையும் ரப்பர் கொண்டு அழித்ததுப் போல் நினைவெல்லாம் அவளைச் சுற்றியே ஓடியது.

போலீஸ் ஸ்டேஷனில் சில பார்மாலிட்டியை முடித்துக் கொண்டு காரில் ஏறிக் கிளம்பினான்.

தனக்கு முன்பே அனுப்பி வைக்கப்பட்ட அவளை சாலையில் தேடினான்.

சற்று தூரத்திலேயே கண்களுக்கு தென்பட்டாள். கிழிந்திருந்தப் புடவையை போர்த்திக் கொண்டு, விந்தியபடி மெல்ல நடந்து கொண்டிருந்தாள்.

காரை ஓரமாய் நிறுத்தி விட்டு, அவளருகே சென்றான்.

''சத்யா!''

திரும்பவே சிரமப்பட்டாலும், அந்த குரலுக்கு ஆச்சர்யத்துடன் திரும்பினாள்.

''ஏன்... எதுக்காக இப்படியெல்லாம்?''

''......?''

''எப்ப இங்கே வந்தே?''

''.....?!''

''எப்படியிருக்கே?''

''....?!''

எதற்குமே பதிலேதராமல் விரக்தியுடன் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு திரும்பி நடந்தாள்.

''என் பேச மாட்டேங்கிறே சத்யா? வா... எங்கே போகணும்னு சொல்லு... நானே கொண்டுபோய் விட்டுர்றேன்!''

மெல்லத் தலையசைத்து விட்டு நடந்தாள்.

''ரொ... ரொம்ப அடிச்சிட்டாங்களா சத்யா?''

''நல்லா கவனிக்கச் சொல்லி மேலிடத்து உத்தரவாச்சே? வலி கூடப் பரவாயில்லே... தாங்கிக்க முடிஞ்சுது. ஆனா, ஒவ்வொரு முறையும் என் அன்புக்காகவே அடி வாங்கிட்டிருக்கேனே... அதை தான் தாங்கிக்க முடியலே...!''

அந்த வார்த்தைகள் அவனை சாட்டைக் கொண்டு அடிப்பதுப் போலிருந்தன. அவன் கால்கள் கட்டிப்போட்டதுப் போல் நின்றன.

அவள்... திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தாள்.

★★★

அவனுக்காகவே காத்திருந்தாள் ஹேமா!

''என்னங்க ஆச்சு? அவளைப்பத்தி விஷயம் ஏதாவது தெரிஞ்சுதா?''

''சூடா காபி வேணும் ஹேமா... தலை வலிக்குது..''

''வள்ளி'' என்று சமையல்காரம்மாவை அழைத்தாள்.

''வேணாம்... நீயே போட்டுக் கொண்டு வாயேன்! அவளை விட நீ தான் நல்லாப்போடறே!''

''இதோ வந்துட்டேன்!'' திருப்தியுடன் நகர்ந்தாள்.

''மனைவியிடம் என்ன பதில் சொல்வது என்று சுத்தமாக யோசிக்கவேயில்லை. அவள் வருவதற்குள் பதிலை தயாரித்து விடலாமே!'

பத்து நிமிடத்தில் காபி கோப்பையுடன் வந்தாள்.

''ஸ்ட்ராங்கா... கொஞ்சம் ஷுகர் குறைச்சு போட்டு எடுத்து வந்தேன். குடிங்க!''

உறிஞ்சியவன், ''எக்ஸலண்ட் ஹேமா!'' என்றான்.

''சொல்லுங்க... அவ மேல கேஸ் ஃபைல் பண்ணியாச்சா?''

''இல்லே ஹேமா!''

''பின்னே?''

''கம்ப்ளைண்டை வாபஸ் வாங்கிட்டேன்!''



''நிலைக் கண்ணாடி முன்னால் நின்னு எதுக்குத் தனக்குத்தானே பேசிக்கறே?''

''மேடைப் பேச்சாளராக ஆக முயற்சி பண்ணறேன்.''

-ஆர்.தங்கராஜ், திருப்பூர்.



''எ..ன்..ன?''

''ஆமாம் ஹேமா... அவ.. கடத்திட்டுப் போக வரலே. அவளோட குழந்தைய மாதிரியே நம்ம அபிலாஷும் இருந்ததால சாக்லேட் குடுத்திருக்கா?''

''அதெப்படி? கரெக்டா அபியோட பேரைச் சொல்லியில்லே கூப்பிட்டிருக்கா?''

''இந்த மேட்டரை இத்தோட விட்டுடேன் ஹேமா! அவ தப்பானவ இல்லேன்னு தெரிஞ்சப்பிறகும் தண்டிக்கறது ரொம்ப தப்பு. அவ ஏற்கனவே செய்யாத தப்புக்கு நிறையவே அடி வாங்கிட்டா... பாவம் நடக்கக் கூட முடியலே!''

''செத்து ஒழியட்டும்!''

''ஹே...மா!''

''ஏன் கத்தறீங்க? என்னாச்சு உங்களுக்கு? அவளைப் பார்த்தா சின்னப்பிள்ளைக் கூடச் சொல்லும்... அவகிட்டே தப்பு இருக்குன்னு. மூணு நாளா தூக்கமில்லாம செத்துக்கிட்டிருந்தேன். நீங்க என்னடான்னா.. கம்ப்ளைண்டை வாபஸ் வாங்கிட்டேன்னு வந்து நிக்கறீங்க. அபிலாஷ் மேல எனக்கிருக்கிற பாசம் கூட உங்களுக்கு இல்லீங்க.''

''என்னைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டு உயிரை வாங்காதே. என்னைக் கொஞ்சம் தனியா விடேன்.... ப்ளீஸ்!''

அன் கத்தலில் ஸ்தம்பித்தவள் விருட்டென உள்ளே போய் விட்டாள்.

அவனும் சொல்லிக் கொள்ளாமலே... அலுவலகம் கிளம்பிப் போனான். ஆனால் அங்கேயும் மனசு வெள்ளாடு மாதிரி சத்யாவைச் சுற்றியே ஓடியது.

என்றும் இல்லாத அதிசயமாக அன்று சீக்கிரமாகவே வீடு திரும்பி விட்டான்.

பணத்தால் இழைத்து கட்டப்பட்ட வீடு!

கிரானைட்டும், குழல் விளக்குகளும், இம்போர்ட்டட் சோபா, நாற்காலிகளும், தேக்கு, ரோஸ்வுட்டால் செதுக்கப்பட்ட சிலைகளும் என.... ஹரி தன் விருப்பப்படி கட்டிய கனவு வீடு!

அழகான, அன்பான மனைவி ஹேமாவால் இன்னும் பிரகாசமாயிருந்தது.

ஹேமா, அபியை மடியில் அமர்த்தி என்னவோ ஊட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

அவளின் வாஞ்சையும், அன்பும் அவனை நெகிழ்த்தின.

இவனைப் பார்த்தும் பார்க்காமல் அமர்ந்திருந்த அவளின் பக்கத்தில் போய் அமர்ந்து தோளை அழுத்தினான்.

''கைய எடுங்க....''

''ஹேமா!''

''எடுங்கன்னு சொல்றேனில்லே?''

''ஏன் இப்படி...''

''ப்ளீஸ்... உங்கக்கிட்டே பேச எனக்குப் பிடிக்கலே.... என்னைக் கொஞ்சம் தனியா விட்டா புண்ணியம்!''

முகத்திலடிப்பதுப் போல பதிலடி......

திகைத்து தான் போனான்.

இத்தனை வருட தாம்பத்யத்தில் அதிகப்படியான கோபமும், எரிச்சலும் இன்று தான் வெளிப்பட்டிருக்கிறது. அது பிள்ளையின் பொருட்டு என்று சமாதானம் பண்ணிக்கொண்டாலும்... வலித்ததை மறுக்க முடியாதே?

ஒதுங்கிப் போனான்.

ஹேமாவும் விலகிப் போனாள்.

நாட்கள் கடந்தன. ஒதுங்கலும், விலகலும் ஒட்டிக் கொள்ளவேயில்லை.

ஹரியினுள் நிம்மதியற்ற அவஸ்தை! ஊடுருவிப் பார்த்தால்... அது ஹேமாவினால் ஏற்பட்டதல்ல எனப் புரிந்தது.

சத்யா.... சத்யாவினால்!

தவித்த மனதிற்கு ஆறுதல் தேடி கோவிலுக்குச் சென்றான்.

சௌடேஸ்வரி அம்மன் கோவில் அது!

அவன் வீட்டிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. திருமணமான புதிதில் வந்தது. அதோடு இப்போது தான் வருகிறான்.

கோவில் இன்னும் விரிவாக்கப்பட்டு புதிதாய் கட்டிடங்கள் கட்டப்பட்டு இருந்தன.

சன்னதியின் பின்புறம் பெரிய நாகலிங்க மரமும், நாவற்பழ மரமும் இருந்தது. மரத்தினடியில் பாம்புப்புற்று இருந்ததால் பாலும், முட்டையும் வைக்கப்பட்டு கெட்ட வாடை வீசும்.

ஆனாலும் ஹரிக்கு அந்த இடம் ரொம்பவேப் பிடிக்கும். புது மனைவியுடன் கடவுள் சன்னதியில் மனம் விட்டுப்பேசி மகிழ்ந்த இடமல்லவா?

அந்த இடம் நோக்கிச் சென்றவனை அதிர்ச்சி அறைந்தது.

அந்த இடத்தில் சத்யா அமர்ந்திருந்தாள்.

கண்களில் நீங்காத சோகம். அடிபட்ட காயங்களின் வீக்கமும், தழும்பும் மிச்சமிருக்க... எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தாள்.

''சத்யா!''

ஒரு திடுக்கிடலோடு அவனைப் பார்த்தவள் அதே வேகத்தில் எழ முற்பட... சேலைக்குள்ளிருந்து வெளியே வந்தது....

தாலி!

கயிறில் எண்ணெய் பிசுக்குடன் அரைப் பவுன் தாலி கண்களில் பட... சட்டென எடுத்து உள்ளே மறைத்துக் கொண்டாள்.

அவளையே கண்கள் விரியப் பார்த்தவனுக்கு நெஞ்செல்லாம் அரித்தது. கண்கள் கரித்தது.

சத்யாவைப் பற்றிய கடந்த காலம் கண் முன் நின்றது.

**5**

மண்டபத்தில் திருமணம்!

உறவினர்களாலும், நண்பர்களாலும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

புரோகிதர் தனக்கு நினைவிற்கு வந்த மந்திரங்களை எல்லாம்



சொல்லி நெய் ஊற்றி புகையை உற்பத்தி பண்ணிக் கொண்டிருந்தார்.

பட்டு வேட்டி சட்டையில் அமர்ந்திருந்த ராம், யாருக்கும் தெரியாமல் இடக்கையால் சத்யாவின் காலை கிள்ளிக் கொண்டிருந்தான்.

யாராவது பார்த்து விடப் போகிறார்களோ என்ற பதைப்புடன் சத்யா தவித்ததை ஓரக்கண்ணால் ரசித்தான்.

மணப்பந்தலை சுற்றி ராமின் உறவினர்களே ஆக்கிரமித்திருக்க, ராம் அம்மாவைத் தேடினான்.

நெற்றியில் பட்டையாய் விபூதிப் பூசியிருந்த மைனாவதியம்மாள் கண்ணாடியணிந்த கண்களின் வழியே மணமேடையை பார்த்தபடி கீழே முன் வரிசையில் அமர்ந்திருந்தார்.

பார்த்து விட்ட ராம் சங்கடப்பட்டான்.

அம்மாவிற்கு திருமணத்தில் விருப்பமில்லை. அவனுக்கென்று ரதி தேவி மாதிரி பெண்ணைப் பார்த்து முடிவு செய்திருந்தார் ரகசியமாக! நல்ல வசதி. கார், வீடு, ரொக்கம் என்று கை நிறைய அள்ளிக்கொண்டு வர பெண் தயாராய் இருந்த நிலையில், மட்டமான நிறமும், சுமாரான அழகும், வக்கற்ற குடும்பமுமாய் இருந்த சத்யாவை தான் திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்து சம்மதம் வாங்கினான்.

சத்யாவைப் பார்த்த முதல் பார்வையிலேயே கொஞ்சமும் பிடிக்காமல் போனது மைனாவதிக்கு.

சத்யாவின் பெற்றோருக்கும் இந்தத் திருமணத்தில் உடன்பாடில்லை. அவர்கள் குடும்பத்தில் முதல் காதல் திருமணம். அதுவும் வேறு ஜாதியில்! மைனாவதியின் அலட்சியமானப் பார்வையும், பேச்சும் கலக்கத்தைத் தந்தது.

பெண் சந்தோஷமாய் வாழ்வாளா? மாப்பிள்ளை அருமையானவர் தான். ஆனால் நல்ல குடும்ப வாழ்க்கை அமைய அது மட்டும் போதுமா என்ன? அதுவும் சத்யா அத்தளவுக்கு திறமைசாலி அல்லவே!

திருமணம் எங்கள் முறைப்படி தான் நடக்க வேண்டும் என்று ஸ்ட்ரிட்டாக சொல்லி விட்டாள் மைனாவதி. அதனால் மனம் சுருங்கிப் போன, சத்யாவின் பெற்றோர் வைகுந்தனும், மகாலட்சுமியும் நான்கு பேரைப் போல கும்பலோடு கும்பலாய் அமர்ந்து விட்டனர்.

அண்ணன் தீபன் வாசலில் நின்று வருகிறவர்களை வரவேற்பது போல் பாவ்லா செய்ய... அண்ணி தான் ஓடி ஓடி குளிர்பானங்களை சப்ளை செய்து கொண்டிருந்தாள்.

சத்யாவின் குடும்பம் வாழ்ந்து கெட்ட ரகம். தங்களால் முடிந்தளவு பொன் வைக்கிற இடத்தில் பூ வைத்து ஒதுங்கிக் கொண்டனர். உறவினர்கள் சூழ்ச்சியால் வீட்டின் மேல் கேஸ் போட்டு, எல்லாம் போட்டு கை விட்டுப் போயாச்சு. பிள்ளையின் தயவில் காலம் ஓடிக் கொண்டிருந்தது.

ஏதோ பிள்ளையாய் பார்த்து தங்கள் சக்திகேற்ப தங்கையை திருமணம் செய்துக் கொடுப்பார் என்று நினைத்திருந்த வேளையில் வசதியான வீட்டுப்பிள்ளையை காதலித்துத் தொலைத்து விட்டால்... பாவம் தீபனும் தான் என்ன செய்வான்?

நண்பன் விக்னேஷை அனுப்பி அம்மாவை மேடைக்கு வரச் சொன்னான். கொஞ்சம் பிகு பண்ணி பிறகு மேடை ஏறி விட்டாள் மைனாவதி.

''உங்கம்மா, அப்பா எங்கே சத்யா?'' மெல்லக் கேட்டான்.

''தெரியலையே!''

பார்வையால் தேடியவனுக்கு அகப்பட்டார்கள் இருவரும்.

''என்ன லட்சணம் இது? பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க? விக்னேஷ் அவங்களையும் கூட்டிட்டு வா!''

புரோகிதர் இருவருக்கும் தட்டில் கூரைச்சேலை, வேட்டி, சட்டை வைத்து உடை மாற்றிக் கொண்டு வர அனுப்பி வைத்தார்.

இதற்கென்றே காத்திருந்தது போல் உறவினர் கும்பலொன்று ராமின் பின்னாடியே சென்றது.

''ராம்... உன்னை நினைச்சா ஆச்சர்யமாயிருக்கு!'' என்றாள் கும்ப கோணத்திலிருந்து வந்திருந்த சீதா சித்தி.

''ஏன் சித்தி? உடை மாற்றிக் கொண்டேக் கேட்டான்.

''ஒரு சட்டைன்னாக் கூட எங்கண்ணனோட செலக்ஷன் பெஸ்ட் செலக்ஷனா இருக்கும்னு உன்னைப்பத்தி பெருமையா சொல்லுவான் என் பிள்ளை வாசு. ஆனா, பொண்ணு விஷயத்தில வொர்ஸ்ட்டா இருக்கே ராம்!''

''.......?''

''நானும் அதைத் தான் சொல்ல நினைச்சேன்! நம்ம சொந்தத்துல இல்லாதப் பொண்ணுகளா? என்னன்னு நினைச்சி இவளைப் பிடிச்சே? உன் கலருக்கும், அழகுக்கும் அவ உன் பக்கத்துல இருக்கறதேத் தெரியலே. மனசுக்கு திருப்தியாவே இல்லே. மைனா இதுக்கு எப்படி ஒத்துக்கிட்டான்னு தான் ஆச்சர்யமாயிருக்கு.'' என்றாள் திருச்சி அத்தை காமாட்சி.

''.......?''!''

''நான் கூட ஒரு வேளை பொண்ணு வசதிபோல... பணத்துக்கு ஆசைப்பட்டு தான் கல்யாணம் பண்ணிக்கிறான் போலன்னு நினைச்சா... அதுவுமில்லே. கல்யாணப்பொண்ணு போட்டிருக்கிறதில பாதி கவரிங் நகை தான்.''

''வயசு இருபத்தெட்டாகியும் சமைக்கத் தெரியாத பையனா இருக்கானேன்னு ஜோஸ்யர் கிட்டே கேட்டேன்!''

''என்ன சொன்னார்?''

''அடுக்களை தோஷம் இருக்கு கேட்டரிங் படிச்சாத் தான் பொண்ணு அமையும்னு சொல்லிட்டாரு!''

-ஆர்.ஜி.அம்பிகைராமன்,
நெல்லை.



''சித்தி ப்ளீஸ்... நிறுத்தறீங்களா?'' என்றான் ராம் கோபமாக.

''எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு. அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கு. பணம் எனக்கு அவசியமில்லே. என் சத்யா அப்படியொன்னும் மோசமாயில்லையே! தேவையான அழகோட லட்சணமாக்வே இருக்கிறா. கோளாறு நீங்க பார்க்கிறப் பார்வையிலே தான் இருக்கு. மனசிருந்தா ஆசீர்வதியுங்க. இல்லேன்னா சும்மாயிருங்க.

இப்படி இந்த நேரத்திலே என்கிட்டே வந்து பேசறது அநாகரீகமாத் தெரியலேயா? உங்க பிள்ளைங்களுக்கு உங்க ஆசைப்படி பண்ணி வையுங்க. அதை விட்டுட்டு...''

''அது சரி..... இப்பவே இவ்ளோ சப்போர்ட்டா. மைனா பாடு திண்டாட்டம் தான்!'' நமுட்டுச் சிரிப்புடன் வெளியேற... கசப்புடன் அவர்களைப் பார்த்தான்.

ஒரு வழியாய் பலரின் வாழ்த்தோடு, கெட்டி மேளம் முழங்க, அட்சதை மழைப்பொழிய சத்யா கழுத்தில் தாலிக்கட்டினான் ராம்.

சத்யா முகத்தில் தான் என்னவொருப் பரவசம்? லேசாய் கண்கள் மினுக்க காதல் கணவனை நன்றிப்பெருக்குடன் பார்த்தாள்.

கனிவான கண்களும், நேர்த்தியான புருவங்களும், ஒற்றைக்கல் மினுக்கிய கூர்மையான நாசியும், புன்னகையை தேக்கி வைத்த உதடுகளுமாய்... என்னக்குறை என் சத்யாவிற்கு?

வசதி வாய்ப்பற்ற நடுத்தர வர்க்கத்தில் பிறந்ததால் எல்லாமே குறைகளாய் தெரியுமோ?

சித்தியும், அத்தையும் சும்மாயிருக்கவில்லை என்பதை வீட்டிற்கு வந்து பால், பழம் சாப்பிட்ட உடனே தெரிந்து போயிற்று.

'அம்மா மயங்கி விட்டாள்' என்ற செய்தி கேட்டு பதறி ஓடி வந்தான்.

''என்னாச்சும்மா?'' அதற்குள் தண்ணீர் அடித்து, புகட்டி எழுப்பி அமர்த்தியிருந்தனர்.

''காலைலேர்ந்து ஒண்ணுமே சாப்பிடலே ராம். பெரியம்மா அழுதுக்கிட்டே இருந்தாங்க.'' என்றான் வாசு.

''காலைலேர்ந்து சாப்பிடலியா? என்னம்மா... என்னம்மா... என்ன இதெல்லாம்?''

''.....?!''

''அழுதியாமே... ஏன்?''

''.....?!''

''இப்ப பதில் சொல்லப்போறியா இல்லையா?''

இப்ப பதில் சொல்லப்போறியா இல்லையா?'' பார்த்தபடியிருந்த சத்யாவையும், மற்ற உறவினர்களையும் சங்கடத்துடன் பார்த்தான்.

''சத்யா... நீ பக்கத்து ரூம்ல இரேன். வாசு எல்லோரையும் கூட்டிட்டுப்போ!''

அனைவரும் அகல... அம்மாவின் தோளை பாசத்துடன் தடவிக் கொடுத்தான்.

''சொல்லும்மா... என்ன பிரச்சனை உனக்கு?''

''என்னை மறந்துடுவியா ராம்?''

''எதுக்கு?'' தூக்கி வாரிப்போட்டது.

''இப்பவே உன் பொண்டாட்டிய தலைல தூக்கி வச்சிட்டு ஆடறியாம். உன் பொழைப்பு நாறப்போகுதுன்னு காது படவே பேசறாங்க ராம். என்னை கை விட்ருவியா? உன்னைப் பிரிஞ்சு ஒரு நாள் கூட இருந்ததில்லையே... என்னை முதியோர் இல்லத்துக்கு அனுப்பிடுவியா?''

''ஐய்யோ... என்னம்மா பெரிய வார்த்தையெல்லாம் பேசிக்கிட்டு? எனக்கு எப்பவுமே நீதாம்மா முக்கியம்! சத்யாவை விடவும் நீ தான் எனக்கு முக்கியம். இந்த வீட்டுக்கு எப்பவுமே நீ மட்டும் தாம்மா மகாராணி. நீ விரும்பாத எந்த விஷயமும் நடக்காது. எனக்கு தெய்வமே நீதாணம்மா. நீ நிம்மதியா இருக்கறது சொந்தக்காரங்களுக்கு பிடிக்கலே... உன் மென்மையான மனசைப் புண்படுத்திட்டாங்க. மறுபடியும் சொல்றேன். எங்கம்மா தான் எனக்கு எல்லாமே.... போதுமா?''

''போதும் ராம்!'' நிம்மதியாய் மூச்சு விட்டாள் மைனாவதி.

## 6

இரண்டு அறைகள் கொண்ட சாதாரண வீடு தான் அது. வைகுந்தன் எல்லாம் இழந்து நொடித்துப் போன பின் வேறு வேலையைத் தேடிக்கக்கூட திராணியற்றுப் போனார். சின்னப்பிள்ளை தனிக்குடித்தனம் போய்விட்டான். பெரியவன் கூட தான் மூவரும் இருந்தனர். சும்மா சொல்லக் கூடாது தன் சக்திக்கேற்றார் போல பெற்றவர்களை நன்றாகவே பார்த்துக் கொண்டான். தங்கையைப் படிக்க வைத்தான். தங்கைக்கு தான் பார்க்கும் அலுவலக நண்பர்களிடம் மாப்பிள்ளை பார்க்கும்படி சொல்லியும் வைத்திருந்தான் தீபன். அதற்குள் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. அவன் மனைவி சாந்தினியும் நல்ல பெண். ஆனாலும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் மட்டந்தட்டி பேசும் ரகம்.

அன்று முதலிரவு!

தரையில் பெட்டை விரித்து அதன் மேல் கொஞ்சம் பூத்தூவி, ஒரு தட்டில் ஸ்வீட், பழங்கள், பக்கத்தில் குவளையில் பால்!

அறைக்குள் நுழைந்த ராமிற்கு என்னவோ போலாகி விட்டது.

கட்டில் கூடவா கிடையாது?

ஆயிரம் கனவுகளுடன் உள்ளே வந்த சத்யாவை அணைத்து கீழே சம்மணம் போட்டு அமர்ந்து விட்டான்.

''நீ சினிமாவெல்லாம் பார்ப்பியா சத்யா?''

''ம்...!''

''அப்ப கண்டிப்பா பர்ஸ்ட் நைட் சீனெல்லாம் பார்த்திருப்பியே...!''

''ம்!'' என்றாள் நாணத்துடன்.

''ஆனா, கண்டிப்பா நம்மளை மாதிரி தரையில் பர்ஸ்ட் நைட் கொண்டாடி இருக்க மாட்டாங்க''

சத்யா சங்கடத்துடன் கணவனை ஏறிட்டாள்.

''என் இவ்ளோ மட்டமா நடந்துக்கறாங்க உங்க வீட்லே?''

''ஸாரிங்க... உங்களுக்கு தான் தெரியுமே... நாங்க அண்ணனை சார்ந்துதான் வாழறோம். நாங்க எல்லோருமே தரையில தான் வாழறோம்.



நாங்க எல்லோருமே தரையில தான் படுத்துப்போம். அண்ணன் ரூம்லே மட்டும் ஒரு கட்டில் இருந்தது. அதுவும் உடைஞ்சுப் போய்ட்டதால தான்... எ... எனக்குப் புரியுதுங்க. ஆனா தப்ப நினைச்சுக்காதீங்க...!''

''ப்ச்... அதில்லே சத்யா. நான் தான் என் வீட்லே இல்லாத பொருளான்னு எந்த சீரும் வேண்டாம்னுட்டேனே! அந்தப் பெருந்தன்மை ஏன் இங்கே இல்லே? நம்ம பர்ஸ்ட் நைட்டுக்காகவாவது ஒரு புதுக்கட்டில் வாங்கியிருக்கலாமே!''

''ஸ... ஸாரிங்க!''

''மூடே ஸ்பாயில் ஆகிடுச்சு சத்யா. எனக்குத் தரையிலே படுத்தே பழக்கமில்லே. இதிலே நமக்கு பர்ஸ்ட் நைட்ங்கறது நினைச்சே பார்க்க முடியலே. குட் நைட்!''

அவன் கன்னத்தில் இயந்திரத்தனமாய் முத்தமிட்டு திரும்பிப் படுத்துவிட்டான்.

அத்தனை பலூன்களும் ஒரு சேர ஊசி கொண்டு உடைக்கப்பட்ட தினுசில் மனசு வலித்தது சத்தியாவிற்கு.

பாலும் பழமும் அவளைப் பரிதாபமாய் பார்த்தன.

★ ★ ★

மறுவீடு வந்திருப்பதால்... ஒரு வாரம் ராம் மாமியார் வீட்டில் இருந்தாக வேண்டிய கட்டாயம். அறைக்குள் நடந்த மனத்தாங்கலை சத்யா யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை.

காலை டிபன் சாப்பாடு முடித்ததும் தீபன், ராமிடம் இரண்டு சினிமா டிக்கட்டுகளை தந்தான்.

''இந்தாங்க மச்சான். சத்யாவும் நீங்களும் சினிமாவுக்கு போய்ட்டு வாங்க''.

வாங்கிப் பார்த்தான். முதல் வகுப்பு டிக்கட் தான். நல்ல படம் தான். ஆனால் தியேட்டர்?

சத்யாவுடன் கிளம்பியவன் வேறு படத்துக்குப் போனான்.

''என்னங்க... இந்தப் படத்துக்கா அண்ணன் டிக்கட் வாங்கியிருந்தார்?''

''இல்லே!''

''பின்னே?''

''ஸாரி சத்யா. திரும்பவும் உன்னை சங்கடப்படுத்தறேன் இல்லே? அந்த தியேட்டர் ரொம்ப பழசு. மூட்டைப் பூச்சி கடிக்காம யாரும் வெளியே வரமுடியாது. எனக்கு ''இந்த அபிராமி, சத்யம், மாயாஜால்னு போய் தான் பழக்கம். உங்க வீட்லே மாப்பிள்ளைன்னா, எவ்வளவு முக்கியமானவர், எப்படி கவனிச்சுக்கனும்ங்கற இங்கிதம் தெரியலேன்னு நினைக்கிறேன். சரி பரவாயில்லே விடு!''

கூனிக்குறுகிப் போனாள் சத்யா.

★ ★ ★

இரவு உணவானதும்'' வர்றேன் சத்யா'' என்றான்.

''எங்கே புறப்படறீங்க?''

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். நான் அவங்க பக்கத்தில்
இருந்தால் தான் தெம்பாயிருப்பாங்க. நீ எங்கே போய்டப் போறே? நான்
எங்கே போய்டப் போறேன்? காலைல வர்றேன். மனசுல எதையும் வச்
சுக்காதே!''
''ம்...!'' என்றாள் எதிர்பார்ப்புகள் பொடிப் பொடியாக. சத்யாவின்
பெற்றோர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.
''ஏ... என்ன மாப்ளே... வீட்டுக்குக் கிளம்பறீங்களாம். அப்படி
போகக் கூடாது மாப்ளே!'' என்றார் புரியாத பார்வையுடன் வைகுந்தன்.
''சம்பிரதாயமெல்லாம் நம்ம சூழ்நிலைகளுக்காக தான் மாமா! அம்
மாவுக்கு உடம்பு சரியில்லே. நான் பக்கத்துல இருக்கணும். சத்யாவே,
'முதல்ல அத்தைய கவனிங்கன்னு' வற்புறுத்தினா. காலைல வந்துட
றேன். வர்றேன் மாமா. அத்தை வர்றேன். தீபன்..'' கண்களால் விடை
பெற்றுச் சென்று விட்டான்.
அன்று மட்டுமல்லாமல் அதற்கடுத்து வந்த நாட்களிலும் இரவான
தும் அம்மா வீட்டிற்குச் சென்று விடுவான்.
தெருவில் உள்ளவர்களுக்கு விஷயம் கசிய... சத்யாவின் தலை தெரிந்
தாலே நமுட்டு சிரிப்புடன் கிசு கிசுத்தனர்.
சாந்தினி ஒரு படி மேலே!
''ஏன் சத்யா... நிஜமாகவே ரெண்டுபேரும் லவ் பண்ணீங்களா?
இல்லே ஒன் சைட் லவ்வா?''
''ஏன் அண்ணி அப்படி கேக்கறீங்க?''
''அவர் சைட்ல அப்படி ஒண்ணும் தெரியலியே! ஆளைப் போட்டு
அம்மாவைப் பார்த்துக்க முடியாதா? இவர்தான் ஓடணுமா? விநோதமா
யிருக்கு. புதுசா கல்யாணம் ஆனவங்க எப்படியிருப்பாங்க? அதுவும் ஆம்
பளைங்க... காஞ்ச மாடு கம்பங்கொல்லையில பாயற கணக்குல அட்
லீஸ்ட் குறைஞ்சது மூணு மாசமாவது இருப்பாங்க. ம்... பார்த்துக்க சத்யா.
நீதான் புத்தி உத்தியா நடந்துக்கணும். அவர் எப்பவும் உன்னையே சுத்தி
வர்றமாதிரி மந்திரம் போடு... தலையணை மந்திரம் தான்!''
அண்ணி கிண்டலாய் மனதை நோகடித்தாலும் அவள் சொன்னதிலும்






உண்மை உறைந்திருப்பதை உணர்ந்தாள். கவலைப்பட்டாள்... யோசித்
தாள்.

★★★

ஏம்ப்பா இங்கே வந்துட்டே?'' என்று உள்ளூறப் பொங்கி சந்தோ
ஷத்தை மறைத்துக் கேட்டாள் தாய் மைனாவதி.
''நேற்று நீ மயங்கி விழுந்ததிலேர்ந்து என் மனசு எதிலேயும் ஒட்ட
லேம்மா. ''அத்தை உம்பு சரியில்லாம இருக்கறப்ப நீங்க அங்கே இருக்க
றது தான் நல்லது'ன்னு என்னை அனுப்பி வச்சவளே உன் மருமகள்
தாம்மா. அவளுக்கு இப்பவே உன்மேல எவ்வளவு அக்கறை தெரியுமா?''
என்றான் சத்யாவையும் விட்டுத்தராமல்.
''அப்படியா?'' என்றதோடு சரி.
அதன் பிறகும் தினமும் இரவில் வந்துவிட கிஞ்சித்தும் தடுக்க முற்ப
டாத மைனாவதி உற்சாகமானாள்.
சம்பிரதாயங்கள் முடிந்து சத்யா கணவனுடன் புகுந்த வீட்டிற்கு சென்
றாள்.
நிஜத்தில்... அன்று தானே அவர்கள் முதலிரவு? பலவித எதிர்பார்ப்
புடன் உடல் முழுக்க ஒருவித அவஸ்தையுடன் நடமாடினாள் சத்யா.
அதே சமயம்... ஒரு பக்கம் பயமாகவும் இருந்தது. இப்போதும் ஏதா
வது காரணம் சொல்லி ராம் அம்மா கூடவே படுத்துக் கொண்டு விடு
வானோ என்று!
ஆனால், அப்படி எல்லாம் எதுவும் நடக்கவில்லை. ராம்... ரொம்
பவே ஆசையுடன், நேசமுடன், காதலின் மூர்க்கமுடன் நடந்து கொண்
டான்.
மனதிலிருந்த பாரமெல்லாம் காணாமல் போனது. திருப்தியும்,
களைப்பும் அவளை பேரழகியாக காட்டியது. கணவனின் நெஞ்சின் மீது
தலை வைத்திருந்தவள் அவன் கன்னத்தை ஆசையுடன் கடித்தாள்.
''எப்பங்க போகலாம்?''
''எங்கேடா?''
''கல்யாணத்துக்கு முன்னாடியே நாம ப்ளான் பண்ணினோமே...
ஹனிமூனுக்கு போகலாம்னு! எப்ப, எங்கே போறதுன்னு டிசைட் பண்
ணிட்டீங்களா?''
''போகலாம்...!''
''அதான் எப்ப?''
''அம்மாவுக்கு உடம்பு குணமானதும்!''
'அவங்களுக்கு என்ன உடம்புக்கு?'' என்று கேட்க நினைத்து, அமை
தியானாள்.
'அத்தை ஆரோக்கியமாத்தானே இருக்காங்க. பிறகேன்... இவர் இப்
படி சொல்றார்?''
திருமணத்திற்கு முன்பு ராமுவுக்கும் சத்யாவுடன் ஹனிமூனுக்கு
குறைந்தது இருபது நாட்களாவது காதல் வானில் சிறகடிக்க வேண்டும்
என்று ஆசைப்பட்டான் தான். ஆனால், திருமணமானதும், 'என்னை

மறந்துடுவியா ராம்?' என்று கேட்டது அவன் உயிர் வரை வதைத்தது.

எந்த சந்தர்ப்பத்திலும் அம்மாவின் மனதில் அப்படியொரு எண்ணம் மறுபடி வரக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தான். அதனால் அடக்கி வாசிக்க வேண்டும் என்று முடிவு செய்தவன், தன்னை அம்மா சத்யாவிடம் அடங்கிப் போய் விட்டான்' என்று எண்ணம் வந்து விடக்கூடாது என்பதற்காக...

ஹனிமூன் போக வேண்டும் என்ற ஆசையை வழித்தெறிந்து விட்டான்.

## 7

அவளும் கேட்டுக் கேட்டு சலித்து விட்டாள்!

கணவனுடன் ஹில் ஸ்டேஷனில், குளிரில் ஒட்டிக் கொண்டு, பூக்கள் உதிர்ந்த ஈரமான பாதையில் நடந்தபடி, பனி மேகங்களுடன் மோதி, காணாமல் அவனைத் தேடி, அறைக்குள் அவனே உடையாய் இணைபிரியாமல்... இன்னும் எத்தனை எத்தனையோ கனவுகள், கற்பனைகள்!

இதோ, திருமணமாகி இரண்டு மாதம் ஆகிவிட்டது. இன்னும் எப்போது?

''எங்க?''

''என்ன சத்யா?''

''உங்கக் கிட்டே பேசணும்!''

''ஆபீஸ் போய்ட்டு வந்துடறேன், நைட்டு பேசலாம். புதுசா ஆரம்பிச்ச தொழில், அதிக நேரம் தேவைப்படுது''.

''சரி சொல்லு!''

''ஹனிமூன் எப்ப?''

''கல்யாணமாகி ரெண்டு மாசமாயாச்சு!''

''ஆமாங்க!''

''இப்பப் போனா ப்ரண்ட்ஸ்கள் கிண்டல் பண்ணுவாங்க. தவிர, ஆபீஸை விட்டு ஊரை சுத்தினோம்னு வச்சுக்க... வந்ததும் இழுத்து மூட வேண்டியது தான். இப்ப தானே வாழ்க்கை ஆரம்பிச்சிருக்கோம்? இன்னும் கடக்க வேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கு. ரெண்டு மூணு வருஷமாகட்டும். பாரினுக்கே போய்ட்டு வரலாம்''.

''அதுக்குப் பேரு ஹனிமூனா? குழந்தைப் பிறந்துடும். பிறக்கறதுக்கு முன்னாடி லைப்பை என்ஜாய் பண்றது வேற... பிறந்த பிறகு என்ஜாய் பண்றது வேற...'' என்றாள் ஏமாற்றத்துடன்.

''சரி... இருக்கட்டுமே... குழந்தையோடவே போய்ட்டு வந்தாப் போச்சு... என்ன குறைஞ்சிடப்போகுது?''

அழகாய் வாயடைத்தான்.

சத்யாவிற்கு ஏகப்பட்ட வருத்தம். கனவுகளும், கற்பனைகளும் பனிப்புகையிலேயே காணாமல் போயின. ஆனாலும் தன் ஏமாற்றத்தை வெளிக்காட்ட விரும்பாமல் கணவனுடன் இன்னமும் ஒட்டி உறவாடினாள்.

அண்ணியின் அறிவுரை அவளை எப்போதும் எச்சரித்துக் கொண்டே



யிருக்கும். அதனால் தன் வெட்கத்தை உதறி கணவனை அடிக்கடி கட்டியணைத்து முத்தமிடுவாள். நுனி நாக்கால் முகமெங்கும் கோலமிடுவாள். மோவாயை, கன்னத்தை பல் பதியக் கடிப்பாள்.

ராமிற்கு பரவசமாகத் தான் இருக்கும். ஆனால் அதையும் மீறி ஒரு யோசனை ஓடிக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் கேட்டான்.

''என்ன சத்யா... நான் செய்ய வேண்டியதெல்லாம் நீ செய்யறே! உனக்கு செக்ஸ் பீலிங்ஸ் அதிகம்'' என்றான்.

''ஆமாம்... அப்படித்தான் வச்சுக்குங்களேன். எனக்கு உங்களைப் பார்த்தாலே கடிச்சித் தின்னணும் போலிருக்கு. அவ்ளோ ஆசை உங்க மேலே!'' என்றாள்.

அவளின் அதீத ஆசை வியப்பை தந்தாலும், அதை விட அதிகமாய் சந்தோஷத்தையும் தந்தது.

அவனும் அவளுக்கு அன்பை தாராளமாய் அள்ளித் தந்தான்.

அதே சமயம், மகன் வீட்டிலிருக்கும் நேரங்களில் எல்லாம் சிட்டுக் குருவிகளைப் போல் இருவரும் கொஞ்சிக் கொண்டும், சிரித்துக் கொண்டு இருந்ததை மைனாவதி கவனிக்கத் தவறவில்லை. சத்யா கணவனின் அன்பில் திளைத்து, பூரித்து முகமெங்கும் பொங்கி வழிய... அந்த அழகுடன் வீட்டில் வளைய வந்தவளை பார்க்கையில் திக்கென்றிருந்தது.

'என் பிள்ளை மாறிவிட்டானா?'

சத்யா நன்றாகவே சமைத்தாள். ருசித்து சாப்பிட்டான் ராம். ஆனால் மைனாவதிக்குத் தான் பிடிக்காமல் போனது. சமையல் சுவையாகத் தான் இருக்கும் நாக்கு கேட்கும். ஆனால் மனசு வீம்பாய் ஒதுக்கும். மகன் இல்லாத நேரங்களில் முகத்திலடிப்பது போல் விமர்சிப்பாள். தொட்டதற்கெல்லாம் முகத்தை தூக்கி வைத்துக் கொள்வாள்.

சத்யா அமைதியாகவே இருப்பாள். ஒரு வார்த்தையும் மாமியாரிடம் பதிலாய் பேசியதில்லை. ஆனால், சிலமுறை கணவனிடம் மனசுப் பொறுக்காமல் ஆதங்கத்துடன் சொல்வாள்.

தன் தாயைப்பற்றி தன்னிடமே குறை சொல்வதை மட்டுமே அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கடினப்பட்டு பொறுமை காத்தவன் ஒரு நாள் கோபமாய் வெடித்து விட்டான்.

''நானும் பார்க்கறேன். எப்பப் பார்த்தாலும் எங்கம்மாவை குறை சொல்லிட்டே இருக்கிறே. பெரியவங்க அப்படிதான் பேசுவாங்க. அதைப் பொறுத்துப் போக முடியாதா? நீ அவங்களை தெய்வமா நினைக்கணும். எங்கம்மா எனக்கு எப்பேர்ப்பட்ட பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணணும்னு நினைச்சாங்க தெரியுமா? ஆனா, என் ஆசையை சொன்னதும் மறுபேச்சு பேசாம சரின்னாங்க தெரியுமா? சொல்லிக் காட்டறேன்னு நினைக்காதே! உன் குடும்ப சூழ்நிலைக்கு எங்க வீட்டுக்கு மருமகளா வர்றது நடக்கற விஷயமா? நடந்துடுச்சே! காரணம் யார்? எங்கம்மா தானே?''

அவனின் கோபம் இதயத்தில் அறைய சுருங்கிப் போனாள்.

ராமிற்கு அவளைப் பார்க்கவே சங்கடமாகிவிட்டது. கோபத்தில் பேசினானே ஒழிய அவனுக்கு அவள் மீது கொள்ளைக் காதல் இருந்தது.

அவள் முகவாட்டம் அவனைத் தாக்கியது.
இதற்குப் பெயர்தானே தாம்பத்யம்?
அவளை சமாதானப் படுத்த சத்யாவை இரண்டு, மூன்று நாட்கள்
அம்மா வீட்டில் கொண்டு போய் விடுவான். அலுவலகத்தில் நேரம் அட்
ஜஸ்ட் பண்ணி மனைவியை மாமியார் வீட்டிலிருந்தே சினிமா, கோவில்
என்று அழைத்துச் செல்வான். மகளை மருமகன் சந்தோஷமாய் வைத்தி
ருப்பது பெற்றவர்களுக்கு மகிழ்ச்சி! அவர்களுக்கு வேண்டியதும் அது
தானே?

ஆனால் தன் வீட்டில் இருக்கும் போது மனைவியுடன் வெளியில்
செல்லத் தயங்குவான். ஓரிரு முறை தவிர கோவிலுக்குக் கூட அம்மாவு
டன் தான் செல்வான்.

''சின்னஞ்சிறுசுக... நீங்க போய்ட்டு வாங்க. நான் வரலேப்பா... கால்
வலிக்குது...' என்று நாசூக்காய் மறுக்கவும் மாட்டாள் மைனாவதி.

அவனாகவே மோதிரம், டிரஸ் எல்லாம் வாங்கிக் கொண்டு, ஒவ்
வொரு முறையும் மாமியார் வீட்டில் தந்ததாக அம்மாவிடம் காட்டுவான்.
அப்படியாவது அம்மா மனைவியை நேசிக்க மாட்டாளா என்கிற நப்
பாசையில்.

அம்மாவையும், மனைவியையும் தன் இரு கண்களாய் நினைத்தான்.
அவர்கள் இருவருக்கும் இவன் தானே உலகம்?

சத்யா உண்டானாள்!

ராம் குதித்தான். அவன் வாரிசாயிற்றே? பெண்களைப் போலவே,
ஆண்களும் முழுமையடைவதும், அதிக மகிழ்ச்சி அடைவதும் அவர்கள்
தந்தையாகும் போது தான்!

வைகுந்தனும், மகாலட்சுமியும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.


மைனாவதிக்கும் சந்தோஷம் தான். இந்தக் குடும்பத்துக்கு மகனின்
பெயரைச் சொல்லிக் கொண்டு வாரிசு வரப் போகிறதே! ஆனால், சத்
யாவை ஏனோ மனசு ஏற்றுக் கொள்ளவே மாட்டேன் என்றது. அவளை
தன் குடும்ப வாரிசை சுமக்கும் ஒரு இயந்திரமாகத் தான் நினைத்தாள்.
அன்பாய் ஒரு வார்த்தை... அவளிடமிருந்து சத்யாவுக்கு போய்ச் சேரவே
யில்லை.

நாக்கு வாய்க்கு ருசியாய்க் கேட்டது. சமைத்துப் போட யாருமில்லை.

''என்ன இது மாப்பிள்ளை பால் புட்டியோடு வந்து நிற்கிறார்.''
''நான் தான் முன்பே சொன்னேனே மாப்பிள்ளைக்கு குழந்தை மனசுன்னு!''
-சண.சிவகுமார்,
முன்னிப்பட்டு.







அவளாகத் தான் சமைக்க வேண்டும். என்றாவது மகாலட்சுமி அவளுக்குப் பிடித்ததை சமைத்து எடுத்து வருவாள். அதுவும், மைனாவதியின் கடுகடு முகம் கண்டு வருவது நின்று போனது.

வாந்தி ஒரு பக்கம் அவளை வாட்டியது. சாப்பிட்ட மறுகணமே குமட்டிக் கொண்டு வர... ஓய்ந்து போவாள்.

சும்மா சொல்லக் கூடாது. ராம் மனைவியை உள்ளங்கையில் தாங்க முடிந்திருந்தால், கண்டிப்பாய் தாங்கியிருப்பான். அவ்வளவு பாசம் காட்டினான். அவளுக்குப் பிடித்ததை எல்லாம் வாங்கித் தந்தான்.

வெரைட்டியாக கூல்ட்ரிங்ஸ் வாங்கி பிரிட்ஜில் நிரப்பினான்.

நான்காவது மாதம் தாளிக்கும் வாசனைக்கே வாந்தி எடுத்தாள்.

நடக்கக் கூட தெம்பின்றி சுருண்டு படுத்துக் கிடக்கும் மருமகளுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்கக் கூட மனசு வரவில்லை மைனாவதிக்கு. அவள் பாட்டிற்கு சீரியலில் மூழ்கி விடுவாள்.

எரிச்சலும், ஆத்திரமுமாய் கணவனிடம் கொட்டினாள்.

''உங்கம்மாவுக்கு எப்படிங்க மனசு வருது? கொஞ்சம் கூட நிக்காம வாந்தி எடுத்துட்டிருக்கேன். பார்த்துக்கிட்டு சும்மாவே உட்கார்ந்திட்டிருக்காங்க. ஒரு டம்ளர் தண்ணீர் குடுக்கக் கூட மனசு வரலே. ஒரு பொண்ணைப் பெத்து வளர்த்து, ஆளாக்கியிருந்தா, அந்த அருமை புரியும்''.

சொல்லி முடிக்கவில்லை.

கன்னம் சிவந்து போனது அவன் அறைந்த அறையில்!

வலியில் துடித்துப் போனவளைப் பார்த்து கத்தினான்.

''எவ்வளவு தைரியம் உனக்கு? என்கிட்டேயே எங்கம்மாவைப் பத்தி மட்டமாப் பேசறியா? அவங்க என்ன உனக்கு வேலைக்காரியா? இதோ பார் சத்யா... இது தான் கடைசி! இனி எங்கம்மாவைப் பத்தி ஒரு வார்த்தை பேசினியோ... என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது!''

அடி தந்த வலியும், அவன் வார்த்தைகள் தந்த வலியும் உள்ளத்தை நைந்து போக வைத்தது.

'வயிற்றில் குழந்தையை சுமந்திருக்கும் நேரத்திலும் கை நீட்டி அடிக்கிறான் என்றால்...?

எல்லாம் அவன் அம்மாவால் தான்?'

அதுவரை மாமியார் மீது வராத விரோத எண்ணம் துளிர்விடத் தொடங்கியது.

## 8

ஏழாவது மாதம்! வயிறு பம்மென்று புடைத்திருந்தது. சத்யா ஆசையுடன் அதைத் தடவினாள்.

கனமானப் பொருட்களை தூக்குவதில்லையே தவிர, அனைத்து வேலைகளையும் அவளே செய்தாள். எல்லாம் முடித்து விட்டு கட்டிலில் வந்து படுத்தவளுக்கு அப்போது தான் உறைத்தது.

காலைலேர்ந்து வயிற்றில் அசைவே இல்லையே! இங்கும் அங்கும் நகர்ந்த இனிய அதிர்வைத் தரும் குழந்தை... இன்று முழுக்க நகரவே இல்லையே! ஒரு நாளைக்கு குறைந்தது பனிரெண்டு முறையாவது அசைவு



இருக்கணுமே!

என்னாயிற்று?

வயிற்றை இங்குமங்கும் மெல்ல அழுத்திப் பார்த்தாள்.

'என் செல்லமே... என்னாச்சு உனக்கு? எப்பவுமே அம்மாவோட விளையாடுவியே... எட்டி உதைப்பியே! இன்னைக்கு ஏன் அமைதியாய்ட்டே? அம்மா பேசறது கேட்குதா? அம்மா ரொம்ப பயந்துப் போயிருக்கேன். வா... அம்மாக் கூட விளையாட வா!''

மனதிற்குள்ளாகப் பேசினாள்.

ஐந்து நிமிடம் சென்றிருக்கும். லேசாக அசைவுத் தெரிந்தது. இருக்க... இருக்க இங்குமங்கும் மிதக்க இடப்புறம் வயிறு புடைக்க... தலை முட்டுவதும் புரிந்தது.

சத்யா பரவசமுடன் தடவிக் கொடுத்தாள்.

''தாங்க்ஸ்டா செல்லம்!''

* * *

வளைகாப்பு முடிந்து சத்யா தாய் வீட்டிற்கு வந்தாள். ராம் தினமும் அலுவலகம் முடிந்து நேரே மனைவியைப் பார்த்து விட்டுத் தான் வீட்டிற்கு செல்வான்.

அன்று.. ஹாஸ்பிடலுக்கு வழக்கமான செக்கப்புக்கு சென்று வந்த பின் இடிந்து போயிருந்தனர். சத்யாவும் அவள் பெற்றோரும்!

குழந்தையின் தலை திரும்பியிருப்பதால் நார்மல் டெலிவரிக்கு வாய்ப்பே இல்லை என்று டாக்டர் கூறி விட்டார்.

விஷயமறிந்த ராம் ஆறுதலாய் மனைவியின் கையைப் பற்றி அழுத்தினான்.

''இப்பல்லாம்... சிசேரியன்ங்கறது சாதாரண விஷயம் சத்யா. அதுவும் நார்மல் டெலிவரியோட வலிக்கு பயந்தே அவங்களே சிசேரியன் பண்ணச் சொல்லிடறது காஷுவலா நடக்குது... பயப்படாதே!''

''....?!''

''மாமா... சத்யாவ எந்த ஹாஸ்பிடல்ல சேர்க்கறதுன்னு முடிவுப்பண்ணிட்டீங்களா? டாக்டர்ஸ் திறமைசாலியா இருக்கறது மட்டுமில்லே, ஹாஸ்பிடலோட சுத்தம். நர்ஸ்களோட அணுகுமுறைன்னு எல்லாத்தையும் சரி பார்க்க வேண்டியிருக்கு. இந்த ஏரியாவிலேயே கிட்டத்தட்ட எட்டு பிரைவேட் ஹாஸ்பிடல் இருக்கு போல... விசாரிச்சிடுங்க...''

''பிரைவேட் ஹாஸ்பிடலா?'' திக்கென்று மனைவியை திரும்பிப் பார்த்தார்.

''என்ன?'' என்றான் புரியாமல்...

''அது... வந்து...''

''சொல்லுங்க மாமா!''

சத்யாவும்... விஷயம் புரிந்து தலைகவிழ்ந்துக் கொண்டாள்.

''ஆ... ஆபரேஷன் வேற...''

''ஆமாம்!''

''குறைஞ்சது முப்பது, நாற்பதாயிரம் ஆகும் மாப்ளே..''

''....?''

''எங்களால அந்தளவுக்கு செலவுப்பண்ணி பார்த்துக்க முடியற நிலைமையிலே இல்லே. அதான் கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியிலே சேர்க்கலாம்னு...''

''எ...என்னது? கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியிலா?'' பொங்கி வந்த கோபத்தை சிரமப்பட்டு அடக்கினான்.

''...?!''

''என் குழந்தை காப்பரேஷன் ஆஸ்பத்திரியிலே பிறக்கறதா?''

''....?!''

''பாருங்க மாமா! நான் அதுக்காக அரசாங்க ஆஸ்பத்திரியை குறை சொல்லலே. எங்க வசதிக்கு எங்க வாரிசு அங்கே பிறக்கறது கவுரவக் குறைச்சல்! நாளைக்கு எங்க உறவுக்காரங்க ரொம்ப மட்டமா பேசுவாங்க! அதனால...''

''....?'' வைகுந்தன் பரிதாபமாய் பார்த்தார்.

''நீங்க நல்ல ஹாஸ்பிடல்ல சேர்த்துடுங்க. ஆகற செலவை நான் பார்த்துக்கறேன்.''

''சத்யா தலை தூக்கி கணவனை கண் கலங்கப் பார்த்தாள்.

மாமனாரும், மாமியாரும் சொல்ல வார்த்தைகள் கிடைக்காமல் நெக்குருகினர்.

மனைவியுடன் அறைக்குள் வந்தான் ராம்.

சத்யா... அவன் நெஞ்சில் முகம் புதைத்து விசும்பினாள்.

''ஏய்... என்ன?''

''உங்க முகத்துல முழிக்கறதுக்கே வெக்கமா இருக்கங்க.''

''ஏன்?''

''ரிக்ஷா ஓட்டறவன் கூட மாமியார் வீட்லேர்ந்து இது வேணும். அது வேணும்னு சட்டதிட்டமாய் பேசி வாங்கிக்கறாங்க. ஆனா உங்க தகுதிக்கு நீங்க அந்தஸ்தான இடத்திலே கல்யாணம் பண்ணியிருக்கலாம். என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதால தானே உங்களுக்கு இத்தனை செலவு...?''

''பைத்தியம்... இதுக்கா அழுறே? பணக்கார வீட்டு மாப்பிள்ளை ஆகறது ஈஸியான விஷயம் தான். ஆனா, மனசுக்கு பிடிச்சவளை கல்யாணம் பண்ணிக்கறது எல்லோருக்கும் வாய்க்கற விஷயமா என்ன? காதலும், கல்யாணமும் கொடுக்கல், வாங்கல் விஷயமா என்ன... ஒரு விஷயத்தைத் தவிர! அன்பு மட்டும் தான்! புரியுதா? கவுரவ விஷயம்ங்கறது அடுத்த பட்சம் தான்! முதல்ல நீயும், குழந்தையும் ஆரோக்கியமா, ஸேபா இருக்கணும்ங்கறது தான் முக்கியம்? இந்த செலவுக்கூட உங்கம்மா, அப்பாவுக்கா செய்யறேன்? என் பொண்டாட்டி, குழந்தைக்காகத்தானே? பீல் பண்ணாம ஹாப்பியா இரு''.

''ம்...!'' என்றாள். இன்னும் அழுத்தமாய் முகம் புதைத்து...

''சரி... குழந்தைக்கு பேர் செலக்ட் பண்ணிட்டியா?''

''ம்... நிறையப் பேர் எழுதி வச்சிருக்கேன்!''

''சொல்லு... பார்ப்போம்!''

''ம்ஹூம். மனசுல தான் வச்சுக்கணும் சொல்லக்கூடாது''

''சென்டிமென்ட்? ஒக்கே விடு... என்ன குழந்தை வேணும்?''

''பெண் குழந்தை வேணும். ஆனா, பிறக்கப் போறது ஆண் குழந்தை தான்!''

''எப்படி அவ்ளோ உறுதியாச் சொல்றே?''

''மனசு சொல்லுது அடிக்கடி கனவு ஒரு ஆண் குழந்தை வருது' அப்படியே உங்க சாயல்ல... அழகா...''

''எங்கம்மா சாயல்ல பிறந்தா சந்தோஷம்.''

''அதெல்லாம் கிடையாது. உங்க சாயல்ல தான் பிறக்கும். என் பிள்ளை அவங்க பாட்டியை வந்து உதைக்கப் போறான் பாருங்க!''

''என் செல்லத்துக்கு எங்கம்மாவைப் பத்தி பேசலேன்னா தூக்கமே 'வராது... இல்லே!'' வலிக்காமல் அவள் கன்னத்தை செல்லமாய் கிள்ளினான்.

* * *

டாக்டர் குறித்த நாளில் ஆபரேஷன் மூலம் அழகான ஆண் குழந்தை பிறந்தது.

நல்ல எடையுடன், தலை நிறைய முடியுடன் வெள்ளை வெளேரென்று அப்பாவின் சாயலில் பிறந்தது.

ராம் குழந்தையைப் பார்த்து அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

மனைவியின் நெற்றியில் இதழ் பதித்து, ''பையன் சூப்பராயிருக்கான் சத்யா... தாங்கிஸ்டா!'' என்றான்.

மைனாவதி கைகள் நடுங்க, கண்கள் மினுக்க, அள்ளி அணைத்துக் கொண்டாள்.

''என் பேரன், என் குலக்கொழுந்து, என் ராஜா,''

''பார்த்து, பார்த்து... கொஞ்சம் மிச்சம் வைங்கம்மா!'' என்று கிண்டல் செய்தான் ராம்.

என் பேரனை என்கிட்டேயே கொடுத்துடுடா! நானே வளர்த்துக்கறேன்''.

''எடுத்துக்கம்மா... உன் பேரன்... உனக்கில்லாத உரிமையா? உன்

''சிஸ்டர்... டாக்டர் எழுதியிருக்கிற மருந்து சீட்டு ஒண்ணுமே தெரியல...! படிச்சு சொல்லுங்க!''

''நீங்க வேற...! அவர் எழுதுற லவ் லெட்டரே புரியாம நான் தவித்துக் கொண்டிருக்கிறேன்.''

-எஸ்.மாரியப்பன், தேனி.



இஷ்டப்படி வளர்த்துக்க. நாங்க இன்னொன்று பெத்துக்கறோம்'' என்றான்.

''இல்லே... இது என் பிள்ளை... நான் தான் வளர்ப்பேன்!'' சற்று அழுத்தமாகவே மாமியாரிடமிருந்து குழந்தையைப் பிடுங்கி அணைத்துக் கொண்டாள் சத்யா.

அதைப் பார்த்து ராம் வாய் விட்டு சிரித்தான்.

''சரி... சரி... வச்சுக்க!'' என்றான்.

மைனாவதி வெறுப்பு கக்கும் விழிகளுடன் மருமகளைப் பார்த்தாள்.

9

'**வா**ழ்க்கை என்பது இத்தனை இனிமையானதாய் இருக்குமா என்ன?' என்ற ஆச்சர்யம் சத்யாவிற்கு அடிக்கடி எழுந்தது.

அவளின் செல்லக்குழந்தை வாழ்வின் அத்தனை சந்தோஷங்களை கூடவே அள்ளிக் கொண்டு வந்திருந்தான்.

உழைத்து களைத்து வந்த ராமிற்கும் மிகப்பெரிய எனர்ஜி டானிக்காக இருந்தான் குழந்தை அபிலாஷ்

மாதங்கள் பல கடந்திருந்தன. அபிலாஷ் தவழ ஆரம்பித்திருந்தான்.

அவன் பின்னேயே தவழ்ந்து செல்வது இருவருக்கும் பொழுது போக்கு.

மைனாவதியும் பேரனை தரையில் விடுவதில்லை. எந்நேரமும் தூக்கிக் கொஞ்சிக் கொண்டிருப்பாள்.

அபிலாஷின் பொக்கை வாய் சிரிப்பில் உலகம் மறந்திருந்தனர்.

அதற்கும் திருஷ்டிப்பட்டு விட்டது போலும்.

ஒரு நாள்!

குழந்தைக்கு தடுப்பூசிப் போடுவதற்காக கணவனுடன் ஹாஸ்பிடலுக்கு சென்றிருந்தாள் சத்யா.

ராமாயணம் புத்தகம் ஒன்று இரண்டு வாரமாகக் காணவில்லை. மைனாவதிக்கு தினமும் அதில் பத்து பக்கமாவது வாசித்தால் தான் பொழுதுப்பூர்த்தியாகும்.

எங்கேபோயிருக்கும்?

ஒரு முறை சத்யா அதை எடுத்துப் புரட்டியதாய் நினைவு. நிறைய புத்தகங்களை படிக்கும் பழக்கமுடையவள் தான் அவளும்.

அவளின் அறையிலிருக்கும் கப்போர்டில் ஏகப்பட்ட புத்தகங்கள் இருக்கும்.

'போய்ப்பார்க்கலாமா?'

தயக்கம் எழுந்தது.

''ஏன் போனால் என்ன? என் வீடு இது? அவள் இங்கு இருப்பதால் அந்த அறை அவளுக்கு சொந்தமாகி விடுமா என்ன?''

மைனாவதி அறைக்குள் சென்றாள்.

அவள் மட்டுமா... கூடவே விதியும் தான்!

அறை சுத்தமாக, பாந்தமாக இருந்தது. இத்தனைக்கும் அபிலாஷ் நிமிடத்திற்கொரு முறை கலைத்துப் போட்டு விளையாடியும்!



அலமாரியில் அழகாக புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

தடிமனாய் இருந்த புத்தகங்களில் பார்வையை ஓட விட்டு, எடுத்துப் பார்த்து அதே இடத்தில் வைத்துக் கொண்டிருந்தாள்.

அப்படி ஒரு புத்தகத்தை இழுத் போது கூடவே ஏழெட்டுப் புத்தகங்கள் கீழே விழுந்தன.

மைனாவதி அவற்றை எடுத்து அடுக்கினாள். அதில் ஒரு பைண்டிங் பண்ணப்பட்டிருந்த புத்தகம் அட்டை பிய்ந்து மல்லாந்திருக்க எடுத்தாள்.

அதனுள்ளிருந்து ஒரு கவர் விழுந்தது.

அதையும் எடுத்து புத்தகத்தினுள் வைக்கப் போனவள், என்ன நினைத்தாளோ பிரித்துப் பார்த்தாள்.

முதலில் ஒரு இளைஞனின் கலர்ப்போட்டோ வந்து விழுந்தது.

யாரிவன்? சத்யாவின் அண்ணனா?

இல்லையே அவனை ஒரு முறைப பார்த்திருக்கிறேனே. கொஞ்சம் கறுப்பாய் அவள் சாயலில் இருப்பான். இவன் யார்?

இதென்ன? இன்னும் விரலில் நெருட கவரினுள் ஏதோ பேப்பர் இருப்பது தெரிந்தது.

எடுத்தாள், பிரித்தாள்!

கடிதம் முத்தான கையெழுத்தில்!

''ஆரம்பமே, என்னுயிர் சத்யாவுக்கு...!'' என்று இருக்க... துணுக்குற்றாள்.

''என்ன கடிதம் இது?''

கண்களை அவசரமாய் ஓடவிட்டாள்.

''என்னுயிர் சத்யாவுக்கு...!''

உன் இதயத்தில் வாழும் மகேந்திரன் எழுதிக் கொள்வது! நாம் வழக்கமாய் சந்திக்கும் இடத்தில் கடந்த ஒரு வாரமாய் காத்திருந்து ஏமாந்துப் போகிறேன். என் மீது இன்னும் கோபமா செல்லம்?

நீ என்னவள் என்று உரிமையினால் தானே முத்தமிட்டேன். அதுவும் கன்னத்தில்! அதற்குக்கூட தகுதியற்றவனா நான்? அன்றிலிருந்து என்னிடம் பேசக் கூட மறுக்கிறாய். நான் செய்தது தவறில்லை என்பது என் கருத்து. தவறென்று நீ நினைத்தால் மன்னித்து விடு! நீயில்லாத வாழ்க்கை எனக்குத் தேவையே இல்லை. உனக்காக அதே இடத்தில் காத்திருக்கிறேன்.

இத்துடன் என் போட்டோ இணைத்துள்ளேன். (இந்த ஒரு வாரத்தில் என் முகம் மறந்திருக்குமோ... என்ற கவலையால்!)

இப்படிக்கு,

உன்னுயிர் மகேந்திரன். (10.11.2000)

படித்து முடித்தவளின் உடம்பெங்கும் வியர்த்துக் கொட்டியது கைகள் நடுங்கின.

'என்னக் கண்றாவி இது? அந்தப்பழிகாரி எவனையோ காதலிச்சிருக்கா. கடிதத்தையும், போட்டோவையும் பத்திரமா ஒளிக்க வச்சிருக்கா? போயும், போயும் என் பிள்ளை அந்த சாக்கடையிலா போய் விழணும். ஒரு வேளை அவனுக்கும் விஷயம் தெரியுமோ? தெரிஞ்சு தான்

வாழ்க்கை கொடுத்திருக்கானோ?

வரட்டும்!

மனதில் எரிமலைக் குழம்பாய் கோபம் கொதிக்க காத்திருந்தாள்.

சிரிப்பு சத்தத்துடன் வந்திறங்கினர் தம்பதிகள்.

பாட்டியைப் பார்த்ததும் அபிலாஷ் தாவினான்.

வாங்கிக் கொண்டாள்.

''எம்மா டல்லாத் தெரியறே? உடம்புக்கு முடியலியா?'' என்றான் தனயன்.

''இல்லேப்பா உன்கிட்ட கொஞ்சம் பேசணும்!''

''என்ன சொல்லும்மா!''

''தனியாப் பேசணும்!''

அடுத்த கணமே நகர்ந்து விட்டாள் சத்யா.

''வா... இப்படி'' என்று மகனை தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''இந்தா... இதைப்பிரிச்சுப்பார்!''

''என்னம்மா இது?''

''அசிங்கம்டா... என் குடும்பத்துக்கு வந்த கேடு... படி!''

குழப்பத்துடன் பிரித்தவன்...படிக்க படிக்க முகம் மாறிக்கொண்டேயிருந்தது.

''இவ பவிசுப்பற்றி ஏற்கனவே உனக்குத்தெரியுமா ராம்?''

''இல்லை'' என்று தலையாட்டினவனை கனமாய் நெஞ்சின் மீது ஏதோவொன்னு அழுத்தியதுப் போல் வலித்தது.

''என்ன இது? ஏன்? எப்படி? சத்யாவா? குழந்தையைப் போல் மெத்மெத்தென்று மேலே விழுந்து காதலாய் விளையாடியவளின் நெஞ்சில் ஏற்கனவே ஒரு காதலா?''

வருடங்கள் கடந்திருந்தாலும் கடிதத்தை கிழித்துப் போடாமல் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாள் என்றால் அவனை இன்னும் உள்ளத்தில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாள் என்று தானே அர்த்தம்?

''எதுக்கு என் மேலே வன்கொடுமை புகார் கொடுத்தே?''

''நிறைவேத்த றாங்களா, இல்லையான்னு டெஸ்ட் பண்ணி பார்க்கத் தான்.''

-ஆர்.தங்கராஜ்,
திருப்பூர்.





ஏற்கனவே ஒருத்தனை காதலித்து, அவனுக்கடுத்த நிலையில் தான் நானா?

நினைப்பே கசப்பாய் இருந்தது.

''எனக்கே எனக்கென்று படைக்கப்பட்டவள் இல்லையா? எவ்வளவுப் பெரிய விஷயத்தை மறைத்து, என்னைக் காதலித்தாள்?

அதெப்படி முடியும்? ஒருத்தனை நினைத்த நெஞ்சம் இன்னொருவனை எப்படி ஏற்கும்?

இது நாள் வரையில் எச்சில் பண்டத்தையா சாப்பிட்டு வந்தேன்?

''இதோப் பார் ராம்... அவ இந்த வீட்லே இருக்கக்கூடாது!''

''அம்மா... என்னைக் கொஞ்சம் தனியா விடும்மா!''

''இதிலே யோசிக்க என்ன இருக்கு... என் குடும்ப மானமேப் போச்சு. ஒரு... இந்த வீட்டுக்கு...''

''சொன்னாப் புரியாது?'' அதட்டலாய் வந்தது குரல். முறைத்து விட்டுப்போய் விட்டாள்.

சற்று நேரம் பொறுத்து தன் அறைக்குச் சென்றான்.

குழந்தைக்கு பாலூட்டிக் கொண்டிருந்தவள் ஜாக்கெட்டை சரிப் பண்ணி, உறங்கிய அபிலாஷை தொட்டிலில் படுக்க வைத்தாள்.

இவனைப் பார்த்ததும், ''சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

''சத்யா...''

''என்னங்க?''

''காதலைப் பத்தி என்ன நினைக்கிறே?''

''என்ன திடீர்னு இப்படியொரு கேள்வி?''

''கேட்டதுக்கு பதில்!''

''வார்த்தைகளால் சொல்லிட முடியுமாங்க? கடவுள் எனக்குக் கொடுத்த மிகப்பெரிய பரிசே... நீங்களும், உங்கள் காதலும் தான்!''

''அப்படியா... சரி இதென்ன கடிதம்?''

அவன் நீட்டியதை இயல்பாய் வாங்கிப் பார்த்தவள் மிக மிக அதிர்ந்தாள்.

''இது... இது... எப்படி... இவரிடம்?''

தலை சுற்றியது பயத்தில் கண்கள் இருண்டன.

**10**

மிக மிக கடினப்பட்டு சுற்றுச் சூழலை உணர்ந்தாள் சத்யா. நாடி நரம்புகளில் ஊடுருவி உடம்பெங்கும் நடுக்கம் பரவியது.

''சொல்லு சத்யா... யாரந்த மகேந்திரன்?'' சத்யா கண்ணீர் மல்க தலை கவிழ்ந்திருந்தாள்.

''சொல்லுன்றேன்ல... ஏமாந்தவன் கேள்வி கேட்கக் கூடாதா?''

''ஐயோ... பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க. நான் உங்களை எந்தளவு நேசிக்கிறேன்னு...''

''வசனம் பேசாதே. பதிலை சொல்லு. மகேந்திரன் யார்?''

''அ... அவன் என்னை காதலிச்சான்!''

''நீ?''

''அது... அது... நான் அப்ப சின்னப் பொண்ணுங்க. உலகம் புரியாத வயசு. ஸ்கூல்ல படிச்சிட்டிருந்தேன். அவன் விரட்டி, விரட்டி காதலிச்சான். அந்த இன்பாச்சுவேஷனை காதல்னு நினைச்சு... நானும்...!''

''காதலிச்சே!''

''இல்லேங்க விவரம் தெரிஞ்சு நான் நேசிச்ச ஒரே ஆண் நீங்க தான்!''

''என்ன அழகாய் பேசறே சத்யா? முத்தம் வரைக்கும் இடம் கொடுத்திருக்கே. யார் கண்டது அதற்கு மேலும்...''

''ப்ளீஸ்... ப்ளீஸ்... அபாண்டமாப் பேசாதீங்க. பதினாறு, பதினேழு வயசுல காதலைப் பத்தி என்னங்க தெரியும்? அவன் தப்பானவன்னு தெரிஞ்சதும், அவனை ஒரேயடியா தலை முழுகினேன்ங்க''

''ஓஹோ... அதனால தான் அவன் கொடுத்த லெட்டரையும், போட்டோவையும் பத்திரமா வச்சிருந்தியாக்கும்''.

''உண்மையை சொல்றேங்க அவன் எனக்கு நிறையவே கடிதம் கொடுத்தான். எல்லாத்தையும் கிழிச்செறிஞ்சுட்டேன். இது மட்டும் எப்படியோ, எதிலேயோ தங்கிடுச்சு''.

என்... இத்தனை பெரிய விஷயத்தையும் என்கிட்டே மறைச்சே?''

''பயமாயிருந்துச்சுங்க. அதனால என்னை வெறுத்திடுவீங்களோன்னு. என் மனசுல உங்களைத் தவிர யாரும் இல்லை. அப்படியிருக்க ஏன் இதையெல்லாம் சொல்லி வீணா மனத்தாங்கலை உண்டு பண்ணணும்னு...!''

''சத்யா... நீ சொல்றதுல எத்தனை சதவீதம் உண்மை, எத்தனை சதவீதம் பொய்னு நான் கண்டறிய விரும்பலே. அந்த மகேந்திரன் இப்ப எங்கேயிருக்கான், என்ன பண்றான்னு தெரிஞ்சுக்கக் கூட விரும்பலே!''

''அவன் அப்பவே அவங்கப்பாவுக்கு மாற்றல் வந்ததால நார்த்சைட்ல...''

''நான் தான் தெரிஞ்சுக்க விரும்பலேன்னு சொல்றேன்ல?'' என்றான் அனல் கக்க.

வாயடைத்துப் போனாள்.

''நடந்ததெல்லாம் சரியா, தப்பான்னு பகுத்துப் பார்க்கிற விசாலமான மனசும் எனக்கில்லே. நான் அப்பட்டமா ஏமாத்தப்பட்டிருக்கேன். எனக்குன்னு வர்றவ மனசாலும், உடம்பாலும் சிறு கீறல் கூட இல்லாம இருக்கணும்னு சின்ன வயசிலேர்ந்தே எதிர்பார்ப்பேன், ஆசைப்பட்டேன். உன் கடந்த கால வாழ்க்கையை என்னால ஜீரணிக்க முடியவில்லை. நீ அப்பவே சொல்லியிருந்தா நம்ம கல்யாணமே நடந்திருக்காது. ஆனா, கல்யாணத்துக்குப் பிறகு தெரிஞ்சதால...''

''...?!''

''நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாழ முடியாது!''

''எ... என்ன சொல்றீங்க?'' சத்யாவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''நாம பிரியறதைத் தவிர வேறு எந்த முடிவும் எடுக்க முடியாது''

''ஐயோ... பேசறது நீங்கதானா? அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்



காதீங்க. எ... என்னால முடியாதுங்க!'' அழுதாள்.

''என்னால முடியும்!'' என்றான் அழுத்தமாக

''நான் மறைச்சது தப்புதாங்க. அதுக்காக வேற என்ன தண்டனை வேணும்னாலும் குடுங்க. என்னை கைவிட்டுடாதீங்க!''

''நீ வேற ஒருத்தனை காதலிச்சதையே தப்புங்கறேன். மறைக்காம சொல்லியிருந்தாலும் கல்யாணம், அது இதுன்னு எங்கம்மா மனசை கஷ்டப்படுத்தாம இருந்திருப்பேன். என்னை விட்ரு சத்யா! இங்கே இருந்து மேலும் என்னை அசிங்கப்படுத்தாதே!''

வார்த்தைகளால் அசிங்கப்படுத்தினான்.

'என்ன நடக்கிறது இங்கே?'

'பதினாறு வயது, வாழ்க்கையை முடிவு செய்கிற வயதா? ஒவ்வொரு பெண்ணின்,-ஆணின் பள்ளிப் பருவத்திலும் பெரும்பாலும் எட்டிப் பார்க்கும் சலனம் தானே இது? ஏன் இவர் கடந்த வாழ்க்கையில் எந்தப் பெண்ணையுமே பார்த்து சலனப்படாமல் இருந்திருப்பாரா? காதலுக்கும், சலனத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறதே! அந்த மகேந்திரன் தப்பானவன் என்று தெரிந்ததும் ஒதுங்கி, ஒதுக்கினேனே! அவன் முகம் நினைவுப் பெட்டகத்திலிருந்து எப்போதே... அழிந்து போனதே! இவர் எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை தருகிறாரே! என்னால் எப்படி முடியும்? அவரைப் பிரியறதா? நினைக்கும் போதே உயிர் பிரிந்து போய்விடும் போல் இருக்கிறதே!

அந்த வீட்டில் ஒவ்வொரு விநாடியும் வேண்டாத கசப்புடனும், மவுனத்துடனே இறந்தன. சத்யா அழுதழுது நெஞ்சம் வறண்டு போனாள்.

மைனாவதியோ ஆர்ப்பாட்டமே நடத்திக் கொண்டிருந்தாள்.

நாக்குதான் பெண்ணுக்கு வாள். அது எப்போதும் துருப்பிடிப்பதேயில்லை. மைனாவதி தன் நாக்கால் அவளை சுழற்றி, சுழற்றி அடித்தாள். அவளை கேவலமாய் விமர்சித்தாள். அவள் இருக்கும் வீட்டில் தானிருக்க மாட்டேன் என்று முரண்டு பிடித்தாள்.

அலுவலகம் போனாலும் அதே சிந்தனை. வீட்டிற்கு வரவும் பிடிக்கவில்லை. சத்யா முகம் பார்க்க பிடிக்கவில்லை. அம்மாவின் கத்தல் பிடிக்கவில்லை. பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது.

அம்மா தீவிரமாய் இருந்தாள். தன் வார்த்தைக்கு செவி சாய்க்கவில்லை என்று அவள் வீட்டை விட்டு வெளியேற... அவளைத் தடுப்பதற்குள் தாவு தீர்ந்துபோயிற்று. சத்யா எவ்வளவோ மன்றாடியும் அவளை அவளின் பெற்றோரிடம் ஒப்படைக்க அழைத்து வந்தான்.

பெட்டியுடன், முகவாட்டத்துடன் மகளையும், மாப்பிள்ளையையும் பார்த்ததும் ஏதோ பிரச்சனை என்று தான் நினைத்தனர் அவளைப் பெற்றவர்கள்.

''வாங்க மாப்பிள்ளே... தீபன் சேர் எடுத்துப் போடு. மகா... காபி போட்டு எடுத்துட்டு வா!''

''பரவாயில்லைங்க... காபியெல்லாம் வேண்டாம். உங்க பொண்ணை விட்டுட்டுப் போகத் தான் வந்தேன்!''

''விட்டுட்டு?'' குழம்பியவர், நீங்க எங்கேயாவது ஊருக்குப்

போறீங்களா மாப்பிள்ளே?''

''இல்லீங்க... இனி உங்க பொண்ணு உங்களோட தான் இருப்பா... நிரந்தரமா!''

''எ... என்ன சொல்றீங்க மாப்பிள்ளை?'' தூக்கி வாரிப் போட்டது அங்கிருந்த அனைவருக்கும்.

''தயவு செய்து என்னை மாப்பிள்ளைன்னு கூப்பிடறதை நிறுத்துங்க முதல்ல''

விஷயம் விபரீதமானது என்று புரியவே... அரண்டு போயினர்.

''ஏன்... ஏன் இப்படியெல்லாம்?''

''நான் உங்க தங்கையை டைவர்ஸ் பண்ணப் போகிறேன் மிஸ்டர் தீபன்!''

''என்ன சார் நீங்க பாட்டுக்கு தலையுமில்லாம, வாலுமில்லாம என்னென்னவோ பேசிட்டு இருக்கீங்க? என்னமோ மளிகைக் கடைல சர்க்கரை, ரவை வாங்கிட்டு வேண்டாம்னு திருப்பித் தர்ற மாதிரி சத்யாவை வேண்டாம்னு தள்ளிட்டுப் போனா என்ன அர்த்தம்?''

''நியாயமான கோபம் மிஸ்டர் தீபன். உங்க தங்கை மலிவான நடத்தை உள்ளவங்கறதால வேண்டாம்ங்கறேன். போதுமா காரணம்?''

''இதோப் பாருங்க... என் தங்கையை அசிங்கமாப் பேசினீங்கன்னா... நான் மனுஷனா இருக்க மாட்டேன்!''

''இந்த கோபத்தையும், அக்கறையையும் அவளை வளர்க்கறதுல காட்டியிருந்தா... இந்த அவமானம் நேர்ந்திருக்காதே தீபன்! இந்தாங்க இதைப் படிச்சுப் பாருங்க... உங்க அன்பு தங்கையோட யோக்யதையை!''

சத்யா கூனிக்குறுகி மகனை இறுக்கி அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தாள்.

படித்த தீபன் முகம் சிவக்க சத்யாவைப் பார்த்து ''த்தூ'' என்று காறித் துப்பினான்.

அடுத்தடுத்து கடிதம் கைமாற...

சத்யாவிற்கு எதிரான காட்சிகள் அரங்கேறின.



''நல்ல முகூர்த்த நாளில் லெல்லாம் அவரை நான் பார்க்கிறேன்... கால்ல செருப்பு போடாமலேயே நடந்து போறாரே? சரியான காந்தியவாதிதான் போல?''

''அட நீ ஒண்ணு! கல்யாண மண்டபத்துக்குப் போறப்ப மட்டும்தான் அப்படிப் போவாரு!''

-ஆர்.ஜி.அம்பிகைராமன்,
நெல்லை.



# 11

காதல் என்பதையே தீண்டத் தகாத வார்த்தையாக கருதியிருந்த குடும்பம்! மகள் ஒருவனைக் காதலிக்கிறாள் என்பதையே ஏற்றுக் கொள்ள முடியாமல் திணறி, வேறு வழியின்றி, அவர்களின் உறுதியான அன்பிற்கு கட்டுப்பட வேண்டியிருந்தது.

அப்படியிருக்க மகள் அதற்கு முன்பே இன்னொரு காதலில் ஈடுபட்டாள் என்று ஆதாரத்துடன் சொல்லும் போது எப்படி ஜீரணிக்க முடியும்?

சத்யாவின் மேல் கேவலமான பார்வைகள் மொய்த்தன. வெறுத்தன.

''கவுரவமான குடும்பம் எங்களோடது. எல்லாத்தையும் மறைச்சி உங்க பொண்ணு என்னை ஏமாத்திட்டா. ஆனது ஆச்சு... மறந்து மன்னிச்சு ஏத்துக்குங்கன்னு தயவு பண்ணி யாரும் டயலாக் பேசாதீங்க. நான் மகான் அல்ல. இந்த ஒண்ணரை வருஷம் வாழ்ந்ததையே ரொம்ப அசிங்கமா நினைக்கிறேன். இந்த குழந்தை என்னோடது. அதை உறுதியா சொல்ல முடியும். அதனால என் குழந்தையை என் கிட்ட ஒப்படைச்சிட சொல்லுங்க... உங்க பொண்ணை நீங்களே வச்சுக்குங்க''

''சார்... உங்களுக்கு வேண்டாம்னா தூக்கி எறிஞ்சிட்டுப் போங்க. அதுக்கேன் எங்க தலைல கட்ட நினைக்கிறீங்க. நாங்களும் கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்தவங்க தான். தங்கச்சி வாழாவெட்டியா வந்திருக்கா, வரதட்சணை கொடுமையால வந்திருக்கான்னா அது ஒரு பேரு! ஆனா, கல்யாணத்துக்கு முன்னால வேற ஒருத்தனை லவ் பண்ண காரணத்துக்காக இவளை கொண்டு வந்து விடறீங்கன்னா... நாங்களும் குடும்பத்தோட தூக்குல தான் தொங்கணும். எனக்கும் ஒரு பெண் குழந்தை இருக்கு. இவளுக்காக என் பொண்ணோட வாழ்க்கைய சீரழிக்க விரும்பலே. எனக்கு ஒரு தங்கச்சி இருந்தா... அவ செத்துப் போய்ட்டா! இதோ... அவளைப் பெத்தவங்க... அவங்க அவளை வச்சுக் காப்பாத்திக்கறதாயிருந்தா... தாராளமா தனியாப் போய் வச்சுக்கட்டும். அவங்க கிட்டேயே பேசிக்குங்க சார்!'' என்றான் தீபன்.

''என்ன தீபன் அப்படி சொல்லிட்டே? நாங்க மட்டுமென்ன மானம் போய் வாழறவங்களா? எனக்கு பொண்ணே இல்லே... அவளுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லே... நீங்க அவளை விரட்டுவீங்களோ, வச்சுக்குவீங்களோ, இல்லே எரிப்பீங்களோ... எங்களுக்குத் தெரியாது. தயவு பண்ணி அவளை வெளியே கூட்டிட்டுப் போங்க'' என்றார் வைகுந்தன்.

மகாலட்சுமி தான் அலைபாய்ந்தாள். பெற்ற வயிறு எரிந்தது.

'ஆளாளுக்குப் பேசறாங்களே... என் குழந்தை பேச சந்தர்ப்பம் தராமல்... அவள் மனதில் என்ன இருக்கிறதென்று தெரியாமல் என்ன பேசுகிறார் இவரும்?'

கண்கள் பொங்கின.

''அ... அ..ப்...பா... நீங்களுமா?'' சத்யா நம்ப முடியாத அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''கூப்பிடாதே தாயே... உன் வாயால என்னை அப்படி சொல்லிக் கூப்பிடாதே... நாங்க என் பிள்ளைய நம்பி வாழறவங்க. இங்கே நின்னு

அதிலே மண்ணள்ளிப் போட்றாதே... போ!''

சத்யா சிரித்துக் கொண்டாள்.

'பாவம்... இவர்களும் தான் என்ன செய்வார்கள்? தீபனின் நிழலில் வாழ்பவர்கள். என்னால் எதற்கு அதற்கும் கேடு! ஆமாம், நான் என்ன தவறு செய்து விட்டேன் என்று ஆளாளுக்கு என்னைப் பந்தாடுகிறார்கள்?'

''ஒரு நிமிஷம்!'' என்றாள், அது நேரம் வரை கவிழ்ந்திருந்த தலையை உயர்த்தி.

''உங்க எல்லோரையும் புரிஞ்சுக்க கடவுள் எனக்கொரு சந்தர்ப்பம் கொடுத்ததாகவே நினைச்சுக்கறேன். வேற எதையும் பேச விரும்பவில்லை. என்னாலயும் தனியா வாழமுடியும். என் குழந்தைய வளர்த்து ஆளாக்க முடியும். உதவின்னு உங்களைத் தேடி வந்தா செருப்பால அடிங்க!''

''ஹலோ... நீங்க எங்கே வேணும்னாலும் போங்க. என் பிள்ளைய என்கிட்டே கொடுத்துட்டுப் போங்க!''

''பாருங்க மிஸ்டர் ராம்! நான் இன்னமும் உங்களை மதிக்கிறேன். பணம், அழகுன்னு முக்கியத்துவம் தராம அன்புக்காக கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க. உங்க உயர்ந்த உள்ளத்துக்காக நான் உங்களை குறைத்து பேச விரும்பலே. உங்களுக்கு அபிலாஷ் கிட்டே எந்தளவுக்கு உரிமை இருக்கோ அந்த அளவுக்கு எனக்கும் உரிமை இருக்கு. ஏன்னா, பத்துமாசம் சுமந்து, வலிக்க; வலிக்கப் பெத்தவ நான்! இப்பவும் உங்கம்மா உங்களை உரிமை கொண்டாடலயா? உன்னை விட எனக்கு எங்கம்மா தான் முக்கியம்னு நீங்க என்கிட்ட சொன்னதில்லையா? தொப்புள்கொடி உறவுங்கறது சாதாரணமானதா என்ன? அதனால அபிலாஷ் எப்பவும் என்கிட்ட தான் இருப்பான். இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம். அவ மூலமா எத்தனை குழந்தை வேணும்னாலும் பெத்துக்குங்க. ஆனா, எனக்கு இப்பவும் சரி, எப்பவும் சரி... என் பிள்ளை மட்டும் தானே உறவு?''

''நீ என்ன பேசினாலும் சரி. என் பிள்ளை எனக்கு வேணும்!''

''வற்புறுத்தினீங்கன்னா எங்க ரெண்டு பேரையும் உயிரோட பார்க்க மாட்டீங்க!''

''என்ன மிரட்டறியா? என் குழந்தைய கோர்ட் மூலமாகவே வாங்கிக் கொள்ள எனக்குத் தெரியும்!'' கோபத்துடன் சவால் விட்டு காரில் ஏறிச் சென்றான் ராம்.

தோளில் குழந்தையும், கையில் பெட்டியுமாக பிறந்த வீட்டைக் கூட திரும்பிப் பார்க்க மனமின்றி நடந்தாள் சத்யா!

★★★

தற்காலிகமாக தன் தோழியின் வீட்டில் சில நாட்கள் தங்கினாள். வேலைக்கு மனுப்போட ராமிடமிருந்த தன் டிகிரி சர்ட்டிபிகேட்களை கேட்டாள். அது கிடைத்தால் வேலைக்குச் சென்று விடுவாளே! அதனால் கண்ணெதிரே கிழித்துப் போட்டான்.



அப்ளை பண்ணி டூப்ளிகேட் சர்ட்டிபிகேட் வாங்க பணமோ, அவகாசமோ இல்லாததால், வேறு வேலை தேடத் தொடங்கினாள்.

தோழியின் உறவினர்கள் மூலமாக, வீடு வீடாய் சென்று கணக்கெடுக்கும் மார்க்கெட்டிங் ரெப்ரசென்டேடிவ் வேலை கிடைத்தது. குழந்தையை தோழியின் வீட்டில் விட்டுச் சென்றாள்.

கடினமான உழைப்பு, இயந்திரத்தனமான உலகில், நேரங்களை எண்ணிச் செலவிடும் மனிதர்களில், இப்படி வீடுவீடாய் வரும் ரெப்ரசென்டேடிவ்களை மதித்து பதில் சொல்பவர்கள் எத்தனை பேர்? என்னமோ, வீட்டை நோட்டம் விட்டு கொள்ளையடிக்கவே வருவது போலவே விரட்டுவதும், முகம் சுளிப்பதும்...

அவர்களும் மனிதர்கள்! அதுதான் அவர்கள் தொழில் என்று எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள்? கணக்கெடுக்கும் வீட்டின் எண்ணிக்கையைக் கொண்டு தானே அவர்களுக்கு கமிஷன் நிர்ணயிக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட அனுபவம் சத்யாவுக்கும் நேர்ந்தது.

''நானும் இதே வேலை பார்ப்பவர்களை மதித்து பதில் சொல்லாமல், பிஸியாய் இருக்கிறேன்' என்று அனுப்பி விடவில்லையா?

அவளுக்கும் அதே மாதிரி பதில்கள் நிறையவே கிடைத்தன.

ஆனால் சோர்ந்து போகவில்லை. குழந்தையின் முகம் நினைவிற்கு வரும். டானிக் பருகியது போல் சுறு சுறுப்பாகி விடுவாள்.

அலைந்தாள், திரிந்தாள். கஷ்டப்பட்டு சம்பாதித்தாள். கண்ணுக்குக் கண்ணான குழந்தையின் முகம் பார்த்து வேதனைகள் மறந்தாள்.

சின்னதாய் தனி வீடு பார்த்தாள்.

தன் தேவைகளை குறைத்தாள்.

வருமானம் வீட்டு வாடகைக்கும், குழந்தையின் பராமரிப்பிற்காகவுமே சரியாய் இருந்தது. அவளின் உணவு குறைந்தது. உடல் இளைத்தது.

ஆனாலும் வைராக்கியமாய் உழைத்தாள்.

அலுவலகம் முடிந்ததும் நேரே குழந்தையைப் பார்க்க வந்து விடுவான் ராம். வீட்டிற்குள்ளே வரமாட்டான். வாசலில் தன் காரில் வைத்து மகனிடம் கொஞ்சுவான்.

அவளிடம் விவாகரத்துக் கேட்டும், குழந்தையை ஒப்படைக்க சொல்லியும் கேஸ் போட்டிருந்தான்.

சத்யா தைரியமாய், நம்பிக்கையாய் இருந்தாள். அபிலாஷ் தனக்குத் தான் என்பதில் உறுதியாய் இருந்தாள்.

அவள் வீட்டிற்கு எதிரே காலிமனை இருந்தது. அங்கே அவளையே பார்த்தபடி ஒரு ஆண் நிற்பதை சில நாட்கள் கழித்தே உணர்ந்தாள்.

அவன் தன்னையே பார்ப்பதும், அவள் பார்த்தால் இளிப்பதுமாய்...

நடுங்கினாள்.

பாதுகாப்பில்லாத பெண் என்பதை நோட்டம் விட்டிருந்தவன், ஒரு நாள் வீட்டிற்குள்ளேயே நுழைந்து விட்டான்.

அவனை எதிர்பார்க்காத சத்யா, பயத்தில் மூச்சு விடவும் மறந்தாள்.

## 12

பயத்தில் காய்ச்சலே வந்து விட்டது சத்யாவுக்கு! நினைத்

துப் பார்க்கக் கூட பயந்தாள்.

அன்று உள்ளே நுழைந்த அந்த காலிப்பயலின் பார்வையும், சிரிப்பும்

''ஏய்...ஏய்... யார் நீ? ஏன் உள்ளே வந்தே? வெளியேப்போ!''

''குழந்தைய வச்சுக்கிட்டு தனியா இருக்கேப்போல உன் பேர் என்ன?''

''இப்ப வெளியேப் போகப்போறியா, இல்லே கத்தி ஊரைக் கூட்டவா?''

''எதுக்கு அவசரப்படறே? எல்லாம் ஒரு அட்ஜஸ்ட்மெண்ட் தான். என் பொண்டாட்டியும் ஓடிப்போய்ட்டா. நீ எதுக்கு வேலைக்குப் போய் அல்லாடறே? நான் பார்த்துக்கறேன்.

தினமும் கார்ல வந்துட்டுப் போறானே அவன் யாரு? என்னை மாதிரி ரூட் போடறானா? யாரையோ நம்பி ஏமாந்துட்ட போல? பிள்ளைய குடுத்துட்டு ஓடிப்போய்ட்டானா?''

''ராஸ்கல் உன்னை!'' மூலையில் சார்த்தி வைத்திருந்த துடைப்பத்தை எடுத்தாள்.

''என்னடி பத்தினி வேஷமாப்போடறே? கார் வச்சிருந்தா தான் படுப்பியா? உன்னை அப்புறமாப் பார்த்துக்கறேன். இந்த முரளியப் பகைச்சுக்கின்னா ஒழுங்கா வாழ்ந்துட முடியாதுன்னு கூடிய சீக்கிரம் தெரிஞ்சுக்கவே! நான் யாரு, என் பலம் என்னன்னு தெரியாதுல்ல? காட்டறேன்!''

விருட்டென்று வெளியேறினான்.

அன்று படுத்தவள் தான்! வேலைக்கு போகக் கூட முடியாதளவு காய்ச்சல்!

ஒரு பெண் தனியே சுயபலத்துடன் தலை நிமிர்ந்து வாழவே முடியாதா? ஏன் என்னை நோக்கி இத்தனை அம்புகள்?

இது நாள் வரை ராம் குழந்தையைப் பார்க்க வரும் பொழுது குழந்தையை வாசலில் விட்டு விடுவாள். ராம் தூக்கிக்கொண்டு காருக்குப் போய் விடுவான். இருவரிடமும் எந்தவித பேச்சு வார்த்தையும் இல்லை. கடந்த இரண்டு நாட்களாக அலுவலகத்தில் அதிக பணி காரணமாக குழந்


''உங்களைப் பார்க்க வந்த உங்க மனைவிகள் இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்...!''

''சரி... நம்ம காதல் விஷயம் அவர்களுக்கு தெரியாம பார்த்துக் கொள்.''

-எஸ்.மாரியப்பன், தேனி.







வந்தையப் பார்க்க ராமினால் வர முடியவில்லை.

அன்று வந்தவன், சத்யாவைப் பார்த்து வியந்தான். 'என்னவாயிற்று இவளுக்கு? ஏனிப்படி இருக்கிறாள்?

குழந்தையை அவனிடம் கொடுத்தவளின் பார்வை தெரு முனையில் பார்த்துக் கொண்டிருந்த முரளியைப் பார்த்து விட்டது.

உடம்பு தன்னிச்சையாய் நடுங்கியது.

குழந்தையுடன் திரும்பினான் ராம்.

''ஒரு நிமிஷம்!''

''......?''

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்.''

''ம்...''

''உள்ளே வாங்க....''

''இல்லே இங்கேயே இருக்கிறேன். என்ன விஷயம்?''

''வாசல்ல வச்சு பேசற வியமில்லே....''

''நம்ம விஷயம் தெருவுக்கே வந்தாச்சு. வாசல்ல வச்சுப்பேசறது தப்பில்லே....''

''வாசலோட உங்க பயணம் முடிஞ்சுப் போறதால தான் என்னை தப்பான கோணத்துல பார்க்க வச்சிருக்கு.''

ராம் புருவம் உயர்த்தினான்.

''அதோ அங்கே நிக்கறானே அவன் பேரு முரளியாம்.

திடீர்னு வீட்டுக்குள்ளே நுழைஞ்சிட்டான்'' என்றபடி அன்று நடந்தவைகளை கூறினாள். ''அதனால நீங்க உள்ளே வந்து உக்கார்ந்துட்டுப் போனா அவனுக்கு ஒரு பயம் வரும்'' என்றாள் மிரட்சியுடன்.

''ஸாரி கேஸ் கோர்ட்ல இருக்கிறப்ப நான் வீட்டுக்குள்ளே வர்றது சரியாயிருக்கா!'' என்றவன் யோசனையுடன் காருக்குப் போனான்.

சத்யா அவன் முதுகையே வெறித்துப் பார்த்தாள்.

★★★

விவாகரத்து வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. வக்கீல் வைத்துக் கொள்ள சத்யாவுக்கு வழியில்லை. அவளே வாதாடினாள்.

எதிர்க்கட்சி வக்கீல் கேட்ட கேள்விகளுக்கு உண்மையை மட்டும் பதிலாகத் தந்தாள்.

''திருமணத்திற்கு முன்பு மகேந்திரன் என்பவருடன் உங்களுக்கு காதல் இருந்ததா?''

''ஆ...ஆமாம்... ஆனால், அது''

''கேட்டதற்கு மட்டும் பதில் தந்தால் போதும். விளக்கம் வேண்டாம்''

''......''?

''குழந்தையுடன் தற்கொலை செய்து கொள்வேன் என்று எனது கட்சிக்காரரிடம் மிரட்டினீர்களா?''

''ஆ...ஆமாம்!''

''இப்போது நீங்கள் பார்க்கும் வேலையில் கிடைக்கும் சம்பளம் குழந்தைக்கும், உங்களுக்கும் போதுமானதாக உள்ளதா?''



''இ...இல்லை!''

''அப்படியானால் குழந்தையை இனி வரும் காலத்தில் எப்படி படிக்க வைத்து ஆளாக்கப் போகிறீர்கள்?''

''என்னால் முடியும். என் பிள்ளைக்காக பிச்சைக்கூட எடுப்பேன்!''

''முரளி என்பவரை உங்களுக்குத் தெரியுமா?''

''அவர் யாரென்றுத் தெரியாது. ஆனால் ஒரு நாள் என் வீட்டுக்குள்...''

''தெரியுமா, தெரியாதா? அதற்கு மட்டும் பதில் கூறுங்கள்''

''தெ..ரி..யு..ம்!''

''எத்தனை வருடங்களாக?''

''வருடங்கள் அல்ல. மாதங்களாக...!''

''அதாவது, நீங்களும், உங்கள் கணவரும் பிரிந்த பிறகு. கடந்த ஒன்பது மாதங்களாக...''

''ஆமாம்!''

''முரளி உங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறாரா?''

''வந்திருக்கிறார்!''

'தட்ஸால் யுவர் ஆனர். மிஸஸ் சத்யா நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர் தான். ஆனால்! நல்ல நடத்தைக் கொண்டவர் அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. இல்லாவிட்டால், பெற்றவர்களும், சகோதரரும் கூட ஏன் அவருடன் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை.

அவர் ஒரு நல்ல மாணவியாகவோ, நல்ல மருமகளாகவோ என்றுமே நடந்து கொண்டதில்லை. சட்டென்று உணர்ச்சிவசப்படக் கூடிய இவரால் குழந்தை அபிலாஷிற்கு ஆபத்து காத்திருக்கிறது.

அவர் வாழும் வாழ்க்கையும், வீட்டிற்கு வந்து செல்லும் தொடர்புகளும், அபிலாஷ் வாழ தகுதியுடையதல்ல. குழந்தையின் எதிர்காலம் கருதி, அவனை அவனுடைய தகப்பனார் மிஸ்டர் ராமிடம் ஒப்படைக்கும்படியும், அவர் மனைவியிடமிருந்து விவாகரத்தும் கிடைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் யுவர் ஆனர்!''

திறமையாக வாதாடினார் வக்கீல் இளங்கோவன்.

சத்யா மிரள மிரள விழித்தாள்.

அதெப்படி இங்கேக் கூட பொய் பேசுகிறாங்கள்?

பாவம் அவளுக்குத் தெரியவில்லை. வக்கீல் பொய்யைத் தவிர வேறெதையும் பேசுவதில்லை என்று.

தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

எனக்கும், முரளிக்கும் கள்ளத்தொடர்பு இருப்பதாக அந்த வக்கீல் சொன்னானே அதைக் கேட்டுக்கொண்டு ராம் சும்மா தானே இருந்தார்? அவரிடமே அவனைப்பற்றி சொல்லி இருக்கிறேனே! ஏனிப்படி எல்லாருமே என் நடத்தை மீது கரிப்பூசுகிறார்கள்.

அபி... அபிக்கண்ணா! நீ சொல்லுடா.. அம்மா தப்பானவளா? ம்! உன்னை என்கிட்டேர்ந்து பிரிக்க என்னை என்னென்னவோ பேசறாங்கடா. நீ அம்மாவை விட்டுப் போய்டமாட்டியே உனக்காகத்தான்டா உயிரை சுமந்துக்கிட்டிருக்கேன். நீயும் என்னை விட்டுப் போய்டாதடா!''

''ம்மா....ம்மா....!'' மழலை மொழியுடன் அம்மாவின் நெஞ்சில்

சாய்ந்து கொண்டான் அபிலாஷ்.

* * *

ஆனால், தீர்ப்பு?

சத்யாவுக்கு எதிராகவே அமைந்தது.

அவளுக்கும், ராமிற்கும் விவாகரத்து வழங்கியதோடு, குழந்தையின் எதிர்கால நலன் கருதி, தந்தையிடம் ஒப்படைக்கும்படியும், வாரத்தில் ஞாயிறு பகல் முதல் மாலை வரை சத்யா குழந்தையைப் பார்க்கலாம் என்றும் ஒரு தாயின் வேதனை மீது அம்பெய்தி துடிதுடிக்க வைத்து தீர்ப்பை எழுதினார் நீதிபதி.

இடிந்துப்போன சத்யா... குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள்.

''இல்லே. நான் என் குழந்தைய தர மாட்டேன். நான் தரமாட்டேன். என்னய்யா தீர்ப்பெழுதறீங்க? உங்களுக்கு பிள்ளைக்குட்டி கிடையாதா? என் பிள்ளை எனக்குத்தான். என்கிட்டேர்ந்து அபியை பிரிச்சிடாதீங்க. நான் தரமாட்டேன்!''

வெறி பிடித்தவள் போல் கத்திக் கொண்டு, குழந்தையுடன் ஒரே ஓட்டமாய் வெளியே ஓடினாள்.

**13**

அமர்ந்திருந்த மைனாவதி நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டு மகனின் கையை இறுகப்பற்றினாள் நன்றியுணர்வுடன்.

''என் மகனை என்கிட்டேர்ந்து பறிக்கப் பார்த்தேயில்லை. இப்போ பார்த்தியா உன் பிள்ளையை நான் பறிச்சுக்கிட்டேன்' என்று வெற்றி மமதையுடன் கறுவிக் கொண்டிருந்தாள்.

நீதிபதி மணவிலக்களிக்கிறேன் என்றதும் சொல்லவொணா வேதனை எழுந்தது ராமிற்கு.

அவன் சத்யாவை உயிருக்குயிராய் நேசித்தது நிஜம். அதனால் தான் இந்த நிரந்தரப்பிரிவு அவன் நெஞ்சில் ரத்தம் வடிய வைத்தது.

''எங்க ஊர்ல ஒரு வண்டித் தண்ணி நாற்பது ரூபாய்...''

''இது பரவாயில்லை... எங்க ஊர்ல ஒரு 'பாட்டில் தண்ணி' எழுபது ரூபாய்...!''

-ஜெ.தனலட்சுமி,
கோவை.





ஒருவேளை அம்மா அந்த விஷயத்தை பெரிதாக்காமல் இருந்திருந்தால், அவனும் கோபத்தோடு அவளை மன்னித்து விட்டிருப்பான். அம்மாவோ அவளை வெளியே அனுப்பியே ஆக வேண்டும் என்று ஆர்ப்பாட்டமே பண்ணி விட்டாள். அம்மாவை மீறி அவனால் எதையும் செய்ய முடியாது.

அன்றுகூட அவளை அவள் வீட்டில் ஒப்படைக்கச் சென்ற போது ஆளாளுக்கு சத்யாவை கேவலமாய் பேசி வதைத்த போது ரத்தம் கொதிக்கத்தான் செய்தது.

தனியே குழந்தையுடன் அவஸ்தைப்படும் போது, அதை ஒரு வாய்ப்பாக கருதி முரளி வீட்டிற்குள் நுழைந்ததை ஒரு குழந்தையைப்பேல் பரிதவிப்புடன் சொன்ன போது அந்த முரளியை எலும்புகள் நொறுங்க அடிக்கத் துடித்த உத்வேகத்தை அடக்கிக் கொண்டான்.

ஆனால், உள்ளிருந்த மிருக குணம், தன் தாயை சந்தோஷப்படுத்த, தன் குழந்தையை அவள் கையில் ஒப்படைக்க தாலி கட்டிய மனைவியின் நடத்தையை கோர்ட்டில் ஏற்றி இழிவுபடுத்தி விட்டான்.

இந்த பாவத்தை எந்த கோர்ட்டில் போல் கழுவுவான்?

இதோ இப்போதும் கூட தனக்கெதிரான தீர்ப்பிற்கு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி குழந்தையுடன் ஓடியவளை மனம் வதைக்கப் பார்த்தான்.

உண்மையில் பெற்றவள் அவளுக்கல்லவா எல்லா உரிமையும் இருக்கிறது?

''ஐய்யோ ராம், அவ என் பேரனைத் தூக்கிட்டு ஓடறா. பார்த்துக்கிட்டு சும்மாவே உட்கார்ந்திருக்கியே போ என் பேரனை தூக்கிட்டு வா!''

'பேரனுக்காக உனக்கே பதைக்கும் போது, பெத்தவளாச்சேம்மா! அவ உயிரையே நாம பறிக்கும் போது சும்மாவா இருப்பாள்?' அம்மாவை ஏறிடவே விரும்பாமல் மெல்ல எழுந்தான்.

அதற்குள் இரண்டு பெண் போலீசார், நீதிபதியின் உத்தரவின்படி விரட்டிச்சென்று, அடித்து குழந்தையை மீட்டனர்.

அவளை இழுத்துக் கொண்டு வந்தனர்.

''அபி, என் அபி, என் அபியக் குடுத்துடுங்க. என் பிள்ளைய என்கிட்ட குடுத்துடுங்க'' கதறி அழுதாள்.

கண் கொண்டு பார்க்க முடியாத ராம் முகத்தை திரும்பிக் கொண்டான்.

ராமிடம் குழந்தையைத் தர, அவன் அம்மாவிடம் தந்தான்.

மைனாவதி பேரனை மார்போடணைத்து உச்சி முகர்ந்தாள்.

''என்னங்க என்னங்க!'' ராமின் காலை வந்து கட்டிக் கொண்டாள்.

''நான் என்னங்க தப்பு பண்ணினேன்? உங்க மனசைத் தொட்டு சொல்லுங்க... நான் தப்பானவளா? உங்களை உண்மையா நேசிச்சதுக்கு எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? அப்பா, அம்மா, அண்ணன் இப்ப என் பிள்ளைன்னு எல்லாரையும் என்கிட்டேர்ந்து பறிச்சிட்டீங்களே! எனக்கு எதுவும் வேணாம். என் பிள்ளைய மட்டும் குடுத்துடுங்க! எல்லாத்திலேயும் பெரிய சோகம் புத்திர சோகம்னு உங்களுக்குத் தெரியாதா? அபி இல்லாம என்னால எப்படி வாழ முடியும்?... நீங்களே சொல்

ஓங்க!'' முகத்தில் அறைந்துக் கொண்டு அழுதாள்.

''ராம் புறப்படு!'' அம்மா அதலட்டலாய் உத்தரவிட, கட்டுப்பட்ட வன் வேகமாகவ் வெளியேறினான்.

பெண் போலீசார் அவளை பிடித்துக்கொள்ள. அவள் கதறக் கதற வெளியேறினர்.

காரில் குழந்தையுடன் அமர்ந்தனர். அபிலாஷ் அம்மாவைத் தேடி உதடு பிதுக்கி அழுதான்.

கார் புறப்பட்டது.

ஒரு தாயின் பாசத்திற்கு முன், பலத்திற்கு முன் போலீசார் எம்மாத்திரம்? அவர்களிடமிருந்த தன்னை விடுவித்துக் கொண்டு காரின் பின்வேகமாய் ஓடினாள்.

''அபீ...''

கார் வேகமெடுத்தது.

''அபீ...'' மிக வேகமாய் ஓடினாள்.

அவள் பின்னே போலீசாரும்.

''ராம் வேகமாப்போ!''

மெல்ல திரும்பிப்பார்த்த ராமிற்கு பக்கென்றது.

ஒரு குதிரையின் பாய்ச்சலோடு ஓடி வந்து கொண்டிருந்தாள் சத்யா. சற்று தூரத்தில் கீழே பெரிய சிமெண்ட் கல் இருப்பதைப் பார்க்காத நேர்ப் பார்வை!

''ஐய்யோ...'' அவன் நடக்கப்போகும் விபரீதம் உணர்ந்து அலற அந்த விபரீதம் நடந்தே விட்டது.

படு வேகத்தோடு ஓடி வந்த சத்யா அந்தக்கல்லில் தடுக்கி விழுந்து தலையில் பலமாய் அடிபட ரத்தம் குபு...குபுவென்று பொங்கியது.

அவன் காரை நிறுத்தி இறங்கி வருவதற்குள்... ஆழ்ந்த மயக்கத்திற்குப் போயிருந்தாள்.

''ராம் நீ காரை எடு!'' என்ற அம்மாவின் வார்த்தையை அலட்சியப்படுத்தினான்.

போலீசார் உடனடியாக சத்யாவை ஹாஸ்பிடலுக்கு கொண்டு சென்றனர். அதன் பின் நடந்ததெல்லாம் ஒரு பெண்ணுக்கு நேரக் கூடாதவை.

பலமாய் தலையில் அடிபட்டதில் சித்தம் கலங்கிப் போனாள். சேலத்திலிருந்த மன நல மையத்திற்கு அனுப்பப்பட்டாள்.

★★★

வீட்டிற்கு வந்திருந்த ஹரி ஆயாசத்துடன் கண்களை மூடி சோபாவில் அமர்ந்திருந்தான்.

வற்புறுத்திய பின் சில வார்த்தைகள் சத்யாவிடமிருந்து உதிர்ந்தன.

''சேலத்திலேர்ந்து எப்ப வந்தே சத்யா?''

''ரெண்டு மாசமாச்சு! குணமாய்ட்டதால... இங்கே ஒரு சேவை மையத்தில் வேலை போட்டுக் கொடுத்து, அங்கேயே தங்க இடமும் கொடுத்திருக்காங்க!''

''அபிலாஷை எப்படி கண்டுபிடிச்சே?''



''வீடு மாறிட்டதால சிரமப்பட்டே கண்டுபிடிச்சேன். உங்க வீட்டுப் பக்கம் சுத்தினேன். அபியை ஸ்கூலுக்கு அழைச்சிட்டுப் போறப்ப காரில் பார்த்திருக்கேன்!'' சொல்லும் போதே, வலியை மீறி கண்களில் மின்னலடித்தது.

கண்களைத் திறந்தவனின் நேரெதிரே பிரம்மாண்ட சைஸில் மாலை போடப்பட்டிருந்த போட்டோவுக்குள் அடைபட்டிருந்தாள் மைனாவதி.

''சார் கொரியர்!''

வாசலில் குரல் கேட்டு நிமிர்ந்தான். ஹேமாவும் அறைக்குள்ளிருந்து வந்தவள் நேரே வாசலை நோக்கிச் சென்றாள்.

''ஹரிராம்ங்கறது...''

''என் ஹஸ்பண்ட் தான்!'' கையெழுத்துப்போட்டு கவரை வாங்கினாள்.

''உங்க பேரு மேடம்!''

''ஹேமா!''

போய் விட்டான்.

கவரோடு உள்ளே வந்தவள் ஹரி... என்கிற ஹரிராமிடம் கொடுத்து விட்டு பக்கத்திலேயே அமர்ந்தாள்.

ஹரி சலனமின்றி அவளை திரும்பிப் பார்த்தான். வறட்டுக் கோபம் காணாமல் போய் அந்த பளிங்கு முகத்தில் செல்லமான நேசம் படர்ந்திருந்தது.

வங்கி கணக்கு சம்பந்தப்பட்ட கடிதம் தான்! படித்து விட்டு டேபிள் மீது வைத்தான்.

ஹேமா அவன் தலையைக் கோதி விட்டாள்.

''ரொம்ப டல்லா தெரியறீங்க... சாப்பிட வாங்க!''

''பசிக்கலே ஹேமா!''

''ப்ச்... என் மேல உள்ள கோபத்தை சாப்பாட்ல காட்ட வேண்டாம். என் பிள்ளை விஷயத்தில் அவசரப்பட்டு முடிவெடுத்திட்டீங்கன்ற கோபம். யோசிச்சுப் பார்த்தேன்.

உங்க பிஸினஸ் டென்ஷன்ல போலீஸ் ஸ்டேஷன் கேசுன்னு அலைய முடியாது. அதை மனசுல வச்சு தான் அவளை விட்டுட்டீங்கன்னு புரிஞ்சுது. ஸாரிங்க!''

மனம் லேசாக... அவள் கையைப் பற்றினான்.

''கோபம்லாம் ஒண்ணுமில்லே ஹேமா... பசிக்கலே! பட், உனக்காக சாப்பிடறேன்... கொஞ்சமா!''

''வாங்க!'' சிறு பெண் போல் துள்ளி எழுந்தாள்.

பேருக்கு கொஞ்சமாய் கொறித்து விட்டு படுக்கைக்குப் போனான்.

திருமணமான புதிதில் அவனும், சத்யாவும் அந்த சௌடேஸ்வரி அம்மன் கோவிலுக்கு தான் சென்றார்கள்.

'அதனால் தான்... அவளும் என்னைப் போலவே அங்கு சென்றாளோ?'

ஹேமா அவன் கழுத்தில் முகம் புதைத்து கிச்சு கிச்சு மூட்டினாள்.

'சாருக்கு என்ன ஞாபகமோ?'' சொல்லிக் கொண்டே கன்னத்தைக் கடித்தாள்.

சத்யா கடித்தது நினைவிற்கு வந்தது.

அவனால் ஈடுபாட்டுடன் ஹேமாவைப் பார்க்க முடியவில்லை.

''ஸாரி ஹேமா... டிஸ்டர்ப்டாயிருக்கேன். பிஸினஸ் டென்ஷன்... தலை வலிக்குது!'' நாசூக்காய் தவிர்த்தான்.

''ஸாரி டியர்... தூங்குங்க!'' அவனை தட்டிக் கொடுத்து விட்டு விலகிப்படுத்தாள்.

## 14

ஹேமா, அபிலாஷை நடுவில் போட்டு தானும் உறங்கி விட்டாள். அவனுக்குத் தான் உறக்கம் வர முரண்டு பண்ணியது.

ஹேமாவை திருமணம் செய்தது கூட அம்மாவின் வற்புறுத்தலாலும், உண்ணாவிரதமிருந்து பிடிவாதம் பிடித்ததாலும் தான்! ஹேமா மைனாவதியின் ஒன்று விட்ட அண்ணன் மகள் தான்.

ஏற்கனவே திருமணமாகி ஒரே வாரத்தில் கணவனை பறிகொடுத்திருந்த இளம் விதவை. அந்தஸ்தில் இவர்களை விட பல மடங்கு.

அம்மாவை ஆச்சர்யம் தாங்கிய வினாவுடன் பார்த்தான். அதன் பொருளைப் புரிந்து கொண்டவள், ''என்னடா, அம்மா ஏற்கனவே கல்யாணமான பொண்ணாப் பார்க்கிறாளே. அந்த சத்யாவை ஏற்கனவே ஒருத்தனை காதலிச்சாங்கிற காரணத்துக்காக வீட்டை விட்டு விரட்டினாளேன்னு பார்க்கறியா ராம்? ஹேமாவும், சத்யாவும் ஒண்ணாகிட முடியுமா? சத்யா உன்னை ஏமாத்தி கல்யாணம் பண்ணிக்கிட்டவ. ஹேமா அவளை மாதிரி கீழ் ஜாதியில்லே. நம்ம உறவுக்காரி, ரதி மாதிரி அழகி, பணக்காரி. அவளுக்கே கல்யாணமாகாத வரன்கள் நிறையவே வந்திருக்கு. ஆனா, அவதான் கல்யாணமான ஆளாப் பாருங்கன்னு சொல்லியிருக்கா. சொல்லப் போனா... முன்னாடியே உனக்கு பொண்ணுதர விருப்பப்பட்டு, அண்ணனும், அண்ணியும் என்னைக் கேட்டாங்க. நீதான் பிடிவாதமா அந்த நாதாரி நாயை கல்யாணம் பண்ணிப்பேன்னு ஒத்தைக் கால்ல நின்னியே! அதுக்கப்புறம் உனக்கும் சரி, அவளுக்கும் சரி, முதக் கல்யாணம் நிக்கல. அவளுக்கு நீதான்னு எழுதியிருக்கறதை யாரால அழிச்சி எழுத முடியும்? உன்னை அவளுக்கு ரொம்ப பிடிக்குமாம் ராம். அதனால் தான் குழந்தைபோல இருக்கிற உன்னை கல்யாணம் பண்ணிக்க உடனே சம்மதிச்சிட்டா!'' என்று அவனுக்கு வாகாய் பதில் சொல்லி வாயை அடைத்தாள் மைனாவதி.

சும்மா சொல்லக் கூடாது. ஹேமா நல்லவள் தான். குழந்தை அபிலாஷை ரொம்ப பிடித்துப் போக தன் பிள்ளையாகவே பாவித்ததோடு, தானொன்று பெற்றுக் கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாய், பாதுகாப்பாய் இருந்தாள்.

அவனையும், அபிலாஷையும் ஏற்றுக் கொண்டவளால் மைனாவதியை, அவளின் தெனாவட்டு பேச்சை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பேச்சு வாக்கில் இறந்து போன முதல் கணவனைப் பற்றி கிண்டலாய் பேசும் அநாகரிகத்தை கற்று வைத்திருந்தாள். ஹேமா வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண் என்பதால், கணவனையும், அபிலாஷையும் கவ



னித்துக் கொள்வதைத் தவிர வேறெந்த வேலையையும் செய்வதில்லை. மைனாவதியைக் கண்டு ஒதுங்கிப்போனாள். ஆனால், சத்யா... மாமியாருடன் எவ்வளவு தான் மனஸ்தாபம் என்றாலும்... அவளுக்குத் தேவையானதை குறித்த நேரத்தில் சரியாக செய்து விடுவாள்.

வீட்டிலேயே ஜிம் இருந்ததால் காலை, மாலை இருவேளையும் ட்ரெட் மில்லில் ஓடுவது, இன்ன பிற உடற்பயிற்சிகள் செய்வது என்று உடம்பை கட்டுக் கோப்பாக வைத்திருந்தாள் ஹேமா.

பழங்காலத்து மனுஷியான மைனாவதிக்கு இதெல்லாம் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

''என்ன ராம்... இவ இப்படியெல்லாம் நடந்துக்கறா... என்னை மதிக்க மாட்டேங்கறா, குடிக்க தண்ணி கேட்டாக்கூட காதிலே விழாத மாதிரி போகிறா''

''என்னைக் கேட்டா? உங்க அண்ணன் பொண்ணு இப்படி அப்படின்னு நீதானே சர்ட்டிபிகேட் குடுத்தே... நீயே கேள்!''

''என்ன குத்திக் காட்டறியா?''

''இல்லேம்மா... இதுவரைக்கும் என்ன சொன்னியோ அதைத்தானே கேட்டு நடக்கறேன். அபிலாஷ் உனக்கே வேணும்னு கேட்டே. போடக் கூடாத பழியைப் போட்டு சத்யாவை அசிங்கப்படுத்தி மென்ட்டல் ஹாஸ்பிடலுக்கே அனுப்பி பிள்ளைய உன்கிட்டே ஒப்படைக்கலியா? உனக்காக என்ன தான் செய்யலே? கல்யாணமே வேண்டாம்னு மறுத்தவனை அடம் பிடிச்சு நீதானம்மா அவளை மருமகளா கொண்டு வந்தே? இதிலே குத்திக்காட்ட என்ன இருக்கு? நான் ஒரு தலையாட்டி பொம்மைதானம்மா!''

குழந்தையக் கூட என்கிட்ட விடமாட்டேங்கறா. அவளே வச்சுக்கறா!''

''உனக்கே இவ்ளோ கஷ்டமாயிருக்கேம்மா... பெத்தவளுக்கு எப்படியிருக்கும்? துடிக்க வச்சு தூக்கிட்டு வந்தோமே!''

''ராம்...!''

''...?!''

''எனக்குத்தான் 'செக்அப்'ல எந்த நோயும் இல்லேன்னு ரிப்போர்ட் சொல்லுதே அப்புறம் எதுக்கு டாக்டர் ஆபரேசன் செய்யணும்னு சொல்லுறீங்க?''

''எனக்கு 'செக்' அப் ஆகணும்ல!''

-ஆர்.ஜி.அம்பிகைராமன், நெல்லை.



''நீ இன்னும் அவளையே நினைச்சிட்டிருக்கியா?''

லேசாய் கோபம் எட்டிப்பார்க்க, வியப்பு மேலிடக் கேட்டாள்.

''எவ்வளவு மோசமான கேள்விம்மா! நான் சத்யா மேல வச்ச அன்பைக் கூட மறந்திடலாம். ஆனா, அவளுக்குப் பண்ணின பாவத்தை எப்படி மறப்பேன்? சத்யாவுக்கு துரோகம் பணணிட்டேன்ம்மா. பெரியதப்புப் பண்ணிட்டேன். உன் பேச்சை நான் கேட்டிருக்கக் கூடாது. என்னையே நம்பி வந்தவளை மென்ட்டல் ஹாஸ்பிடலுக்கு அனுப்பி வச்சேன். அவ பிரச்சனைகளை எனக்கு சாதகமாக்கி, நானே அவளை முரளியோட சம்பந்தப்படுத்தி அசிங்கப்படுத்திட்டேன். என் அறிவுக்கு புரிஞ்சதும்மா... பழைய காதல் விஷயமெல்லாம் தப்பா எடுத்துக்கற அளவுக்கு சத்யா தப்பானவ இல்லேன்னு. ஆனா மனசு முரண்டு பண்ணுச்சு. ஈகோ தடுத்துச்சு. ஒரு வேளை நீ அவளுக்கு சாதகமாப் பேசியிருந்தா... அவளை ரெண்டு திட்டு திட்டி விட்டிருப்பேன். என்னை விட அதிகமா முரண்டு பிடிச்சதே நீதானே!''

''ராம்... நீயா பேசறே? அம்மா உன் நல்லதுக்கு தானே செஞ்சேன்?''

''நிம்மதியில்லாம தவிக்கிறேனம்மா! அப்பா உன்னை நடுத்தெருவிலே விட்டிருந்தா... புழு மாதிரி துடிச்சிருக்கமாட்டே! என்னை மட்டும் ஏம்மா அப்படியொரு பாவத்தைப் பண்ண வச்சே? உன்னை மாதிரி அவளும் பொண்ணுதானே? என் சத்யாவை என்கிட்டேர்ந்து பிரிச்சிட்டியேம்மா!'' பொருமினான், கலங்கினான்.

இது மாதிரியெல்லாம் ராம் பேசி கேட்டறியாத மைனாவதி உடைந்து போனாள்.

அந்தக் கவலை அவளை ரொம்ப நாள் விட்டு வைக்கவில்லை. ஒரு நாள் உறக்கத்திலேயே அவள் உயிர் பிரிந்தது.

ஹரிராம் தன்னை நம்பி வந்த ஹேமாவுக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. குழந்தையை அவள் குறையின்றி கவனித்துக் கொண்டதால் முழு கவனத்தையும் பிஸினஸில் செலுத்தினான். லாபம் கொட்டியது. தொழிலை விரிவு படுத்தினான். நகரின் முக்கியஸ்தர்களில் ஒருவரானான்.

ராம், சத்யாவுடனான தன் திருமண ஆல்பத்தை பீரோவில் பூட்டி வைத்திருந்தான்.

ஹேமா பலமுறை மெல்ல சத்யா பேச்சை எடுப்பதுண்டு.

ராம் பதில் கூறாமல் பேச்சை மாற்றுவான்.

ஒரு நாள் எப்படியோ சாவி கிடைத்து, பீரோவை திறந்து ஆல்பத்தை எடுத்து விட்டாள்.

''ஏங்க... நான் எத்தனை முறை கேட்டிருப்பேன். கல்யாண ஆல்பத்தைக் காட்டுங்கன்னு. இல்லே... எப்படியோ மிஸ்ஸாயிடுச்சுன்னு சொன்னீங்க. ரொம்ப பத்திரமா வச்சிருக்கீங்க'' என்றாள் அவன் கண்களில் தவறை ஆழமாய் தேடியபடி.

''ஏன் எடுத்தே ஹேமா... என் பர்மிஷன் இல்லாம!''

''உங்க பர்மிஷன் எனக்கெதுக்கு? ஐம் யுவர் பெட்டர் ஹாப்! பத்திரமா ஒளிச்சு வச்சிருக்கீங்க''

''சரி... என்ன இப்ப?''



''எவ்ளோ சாதாரணமாக கேக்கறீங்க. உங்களுக்கும் அவளுக்கும் டைவர்ஸ் ஆயாச்சு. அவ சம்பந்தப்பட்ட எந்தப் பொருளும்... ஐ மீன் அவளுடைய நினைவுகள் கூட உங்க கிட்டே இருக்கக் கூடாது. நீங்க எனக்கு மட்டும் தான் சொந்தம்''.

''...?!''

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? நான் ரொம்ப பொஸஸிவ் கேரக்டர்''

''அபிலாஷ்... சத்யாவை நினைவு படுத்தலையா ஹேமா?''

''இல்லே... அவன் உங்க பிள்ளை. உங்க ஜீன், உங்க ரத்தம், அவன் வாடகைத் தாய் மாதிரி... அவ்வளவு தான்!''

''...?!''

''ஆச்சர்யமாயிருக்கு. அவளை விழுந்து, விழுந்து காதலிச்சி, பிடிவாதம் பிடிச்சி கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களாம். அப்படி என்ன இருக்கு அவகிட்டே? அட்ராக்ட் பண்ற அளவுக்கு அந்த பைத்தியம் கிட்டே ஒண்ணுமே இல்லையே!''

''ஹேமா... திஸ் இஸ் த லிமிட்! சத்யாவைப் பத்தி மட்டமாப் பேசறதை என்னால அனுமதிக்க முடியாது''

''நீங்க யாரு அனுமதிக்கறதுக்கு? அதான் கோர்ட்டே பிரிச்சு வச்சிடுச்சே! சொல்லப் போனா, ஒரு மென்ட்டல பத்தி பேசறதுக்கு நான் தான் யோசிக்கணும். அவ இருந்த இடத்துல தான் இப்ப நான் இருக்கேன்றதே... ஜீரணிக்க முடியாத விஷயம்!''

திமிரும், கர்வமும் போட்டி போட பேசியவளை அடிக்கத் துடிக்க உணர்வுகளை அபிலாஷை நினைத்து தன்னை அடக்கிக் கொண்டவன்... அதே வேகத்தோடு வெளியேறினான்.

## 15

அன்று அவன் திரும்பி வந்த போது ஆல்பத்தை எரித்து வைத்திருந்தாள் ஹேமா. அவளின் முரட்டுத் தனம் கண்டு வாயடைத்துப் போனான். எச்சரிக்கையாக இருந்தான். தப்பித் தவறிக்கூட சத்யாவின் பெயரை உச்சரிக்கவில்லை.

''அவரை போலி டாக்டர்னு ஏன் சொல்றே?''

''காலில் ஆணி என்றதும் காந்தக் கல்லை வச்சு இழுத்துடலாம்னு சொல்றாரு!''

-எஸ்.குருமூர்த்தி, தருமபுரி.



அன்று முதல் இன்று வரை அவன் கவனமாகவே இருந்தான்.

கஸ்தூரிபாய் சேவை மையம்!

முதியோர்கள், குழந்தைகள், பெண்கள் என்று கைவிடப்பட்டிருந்த அத்தனை ஜீவன்களும் அடைக்கலமாகியிருந்த நந்தவனம் அது!

வார்த்தை ஜாலத்திற்காக அல்ல... நிஜமாகவே நந்தவனம் தான் அது!

உண்மையான தொண்டுள்ளம் கொண்ட சிலரால் நடத்தப்படுகிறது. வெளிநாட்டு வாழ் இந்தியரால் தயாள கொடையளிக்கப்பட்டு ஊர் ஊராய் கிளை நிறுவனங்கள் நிறுவப்பட்டு சேவை செய்து வருகின்றனர்.

மரங்களும், செடிகளும் சூழ்ந்த, கட்டிடங்கள். தரமான உணவு, ஆரோக்கியமான சூழ்நிலை, கைத்தொழில் கற்றுத்தருதல், கல்வியுடன் கம்ப்யூட்டர் பயிற்சி என்று நல்ல பெயருடன் திகழ்ந்து வருகிறது கஸ்தூரி பாய் சேவை மையம்!

கடந்த இருபது நாட்களாக வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அந்நிறுவனத் தலைவர் லலிதா முதல் நாள் இரவு தான் ஊர் திரும்பி இருந்தார்.

நிறுவனத்தை வலம் வந்து, அங்கிருப்பவர்களுடன் உரையாடிவிட்டு தன் அறையில் வந்தமர்ந்தவர் அப்போது தான் உணர்ந்தார்.

சத்யாவை, எங்கே காணோம்? கண்ணிலேயே படவில்லையே!'

அடுத்த நிமிடமே அவளிருந்த இடம் தேடி ஆள் போனது.

தயங்கித் தயங்கி தான் அறைக்குள் நுழைந்தாள். அவளைப் பார்த்த லலிதாம்மா துள்ளாத குறையாக அதிர்ந்தாள்.

''சத்யா... என்னாச்சு... முகம், உடம்பெல்லாம் என்ன காயம்?''

''அ... அது... வந்து... கீழே விழுந்துட்டேன்!'' அவள் கண்களை நேரேப் பார்க்க தைரியமின்றி தலை கவிழ்ந்தாள்.

''கீழே விழுந்து அடிபட்ட மாதிரித் தெரியலியே... யாரோ அடிச்ச மாதிரியில்லே இருக்கு?''

''இ... இல்லே... ம்மா... ஆமாம்மா!'' ஒரு நிமிடத்திற்கு கூட அவளால் பொய்யைக் காப்பாற்ற முடியவில்லை.






எழுபது வயது லலிதாம்மா அவளருகில் வந்து, தவிப்புடன் கையைப் பற்றினாள்.

''யாரு... யாரது உன்னை அடிச்சது?''

''போ... போலீஸ்?''

''போலீஸ்? ஏன்?'' வியப்பின் எல்லைக்கே போனாள்.

சத்யா... பயத்துடன், அழுகையுடன், வலியுடன் விவரித்தாள்.

லலிதாம்மா அவளைப் பற்றிய முழு விபரமும் அறிந்தவர். சேலத்தில் தன் மன நல காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த சத்யாவை அங்கு சென்றிருந்த போது குணமாகாத நிலையில் இருந்தவளை பார்த்து நெகிழ்ந்தார். தீவிர சிகிச்சைக்குப் பின் குணமானவளை தன் கண்காணிப்பில் வைத்துக் கொள்ள விரும்பி சென்னைக்கே அழைத்து வந்து விட்டார்.

தினசரி உணவு தயாரிப்பிற்கான காய்கறி, அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட கணக்கு வழக்குகளை பார்க்கும் வேலையை அவளிடம் ஒப்படைத்து, ஒரு சிறு தொகையை சம்பளமாக தந்து அங்கேயே தங்க இருப்பிடமும் தந்தார்.

''சத்யா... ஏம்மா அவசரப்பட்டே?''

''என்... என் பிள்ளைய பார்க்காம என்னால இருக்க முடியலேம்மா!''

''உன் பீலிங்ஸ் எனக்குப் புரியுது சத்யா! பாரு எவ்வளவு காயங்கள்? தவிர, மிஸ்டர் ராம் நடந்து கொண்ட விதம், அவர் மனசாட்சியே அவருக்கு தண்டனையை வழங்கியிருக்குன்னு புரியுது. நான் அவரைப் பார்த்து பேசவா?''

''இல்லேம்மா... வேண்டாம். இதே ஊர்ல தான் என்னைப் பெத்தவங்களும் இருக்காங்க. அவங்களையும் கூட எனக்குப் பார்க்கத் தோணலே. அதே மாதிரி தான் என் பிள்ளையோட அப்பாவையும்! என் உயிர், மூச்சு எல்லாமே என் அபிலாஷ் மட்டும் தான். ஆனா, அவனுக்கு என்னை யாருன்னே தெரியலேம்மா!''

கதறியவளை, வார்த்தைகளின்றி அணைத்து தட்டிக் கொடுத்தார்.

★★★

அன்று அபிலாஷின் பிறந்த நாள்.

விடியற்காலையிலிருந்தே பங்களாவில் தோரணம் கட்டுவதும், சமையல் செய்வதுமான வேலைகள் ஆரம்பமாகியிருக்க...

காம்பவுண்ட் சுவரை ஒட்டி, சேலைத் தலைப்பால் உடம்பைப் போர்த்திக் கொண்டு மெல்ல எட்டி, எட்டிப் பார்த்தாள் சத்யா.

அபிலாஷ் தன் கண்ணில் படமாட்டானா, என்கிற ஏக்கம் வழிந்தது.

எதற்காகவோ காரை எடுத்துக் கொண்டு வெளியில் வந்த ஸ்ரீராம் அரையிருட்டில் ஒரு உருவம் தயங்கித் தயங்கி நகர்ந்து செல்வதை சந்தேகத்துடன் பார்த்தான்.

''ஏய்... யாரது... ஓடாதே... நில்லு!''

காரை வேகமாய் அவளருகே நிறுத்தி, காரின் வெளிச்சத்தில் அவளைப் பார்த்தவன், திடுக்கிட்டான்.

''ச...த்...யா! நீயா?'' அவசரமாய் இறங்கினான்.

"என்ன சத்யா?"
"ஓ... ஒண்ணுமில்லே..." நகர்ந்தாள்.
"ஒரு நிமிஷம் சத்யா!"
"...?!"
"அபிலாஷை பார்க்கணுமா?"
ஈரத்தில் பளபளத்த கண்களால் அவனைப் பார்த்தாள்.
"ம்!"

"எத்தனை சட்டங்கள் பிரித்தாலும் அவன் உன் பிள்ளை சத்யா. சௌடேஸ்வரி அம்மன் கோவிலுக்கு அழைச்சிட்டு வரட்டுமா?"

கண்கள் சிரிக்க, கை கூப்பி விட்டு, வேகமாய் சென்றவளை நெஞ்சம் பதைக்க பார்த்துக் கொண்டிருந்தான் இவன்.

★ ★ ★

அம்மனுக்கு பாலாபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. ஹரிராம், ஹேமா, அபிலாஷ் ஆகியோர் பிரகாரத்தில் நின்றிருக்க... சற்று தள்ளி ஒரு தூணின் மறைவில் நின்றபடி தன் மகனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சத்யா.

"இந்தக் கோவிலுக்கு எதுக்குங்க அழைச்சிட்டு வந்தீங்க? வழக்கமா காளிகாம்பாள் கோவிலுக்கு தானே போவோம்? கோவில் சின்னதா, பழசாயிருக்கே?

கிசுகிசுத்த ஹேமாவை முறைத்தான்.

"கோவில்லேயும் பாரபட்சம் பார்க்க ஆரம்பிச்சிடாதே! கோவில் பழசாயிருந்தாலும், சின்னதாயிருந்தாலும் எல்லாசாமியும் ஒண்ணு தான்!"

ஹேமாவை ராமின் அருகில் சேர்த்துப் பார்க்கவே நெஞ்சடைத்தது.

மனுஷங்களை மாதிரி, நீயுமல்லவா தாயே என்னைக் கைவிட்டுட்டே? எத்தனையெத்தனை மோசமான சம்பவங்கள் நடந்தேறிவிட்டன?

அதோ என் செல்லப்பையன். கருவாக உருவான நாளிலிருந்தே... என் பிள்ளையை இப்படி வளர்க்கணும், அப்படி வளர்க்கணும்னு கனவு கண்டு, மனசுக்குள் பேசி மகிழ்ந்தேனே! ஆனா, இப்ப, என் பிள்ளை கூட பேசக் கூட எனக்கு பாக்கியமில்லை. ஆசை, ஆசையாய் நான் வைத்த பெயரை சொல்லிக் கூப்பிடக் கூட இன்று எனக்கு உரிமையில்லை. அவனை தூரத்தில் இருந்து திருட்டுத் தனமாய் பார்க்கிற அளவுக்கு என்ன பாவம் செய்து விட்டேன்?

என் அபிக்குட்டி எவ்வளவு பெரிதாய் வளர்ந்து விட்டான்? அப்படியே அப்பாவை உரித்துக் கொண்டு பிறந்திருக்கிறான்? அவனைக் கட்டிக் கொண்டு முத்தமிட வேண்டும் போல் இருக்கிறதே! ஏனம்மா என்னை சோதிக்கிறாய்?'

"மம்மி... சாமிய ஏன் பால்ல குளிப்பாட்டறாங்க? எறும்பு கடிக்காது?" அபிலாஷ் ஹேமாவின் மேல் சாய்ந்து கொண்டு கேட்டது காதில் விழுந்தது.

சத்யாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.



அபி... நான் தான் உன் அம்மா. உன்னைப் பெத்தவடா. என்னை அம்மான்னு கூப்பிடுடா கண்ணா! அம்மான்னு கூப்பிடுடா...' மனசு ஓலமிட....

அதற்கு மேல் அங்கு நிற்பது உசிதமல்ல என்பதை உணர்ந்தவள்... வேகமாய் திரும்பி நடந்தாள்.

ஹரிராம் அவள் செல்வதை குழப்பத்துடன் பார்த்தான்.

## 16

வழக்கமாய் வாங்கும் மார்க்கெட்டில் காய்கறிகளை வாங்கிக் கொண்டு வேனில் ஏறப் போனவளை அந்தக்குரல் புரட்டிப் போட்டது.

"சத்யா!"

திரும்பியவளின் விழிகள் வியப்பில் விரிந்தன.

"நீ...ங்...க...ளா?"

"உனக்காக தான் வெய்ட் பண்ணிட்டிருந்தேன் சத்யா!" என்றான் விழிகளில் நேசம் பொங்க.

"நா... நான் இங்கே... எப்படி...?"

"நானே சொல்லிடறேன் உன்னைப் பத்திய எல்லா விபரமும் எனக்குத் தெரியும். நமக்கு வேண்டப்பட்டவங்களை பத்தி தெரிஞ்சுக்கிறது பெரிய விஷயமா என்ன?"

"இ... இனி இப்படி. ரோட்ல சந்திக்கறது உங்களுக்கும் சரி, எங்கள் சேவை மையத்துக்கும் சரி. நல்லதல்ல... அதனால, தயவு செய்து என்னை சந்திக்க வராதீர்கள்" தீர்மானமாய் கூறி விட்டு வேனில் ஏறி அமர்ந்தாள்.

"சத்யா ப்ளீஸ்... உன்கிட்ட நான் நிறையப் பேசணும்."

"அதனால எந்த பிரயோஜனமும் இல்லே... வண்டிய எடுங்க சோமுண்ணா!"

"சத்யா... சத்யா...!"



அவன் கத்தக்கத்த வண்டி வேகமாய் போய் விட்டது.

ஆனால், சத்யாவின் மனசு தான் மின்சாரக் கம்பத்தில் சிக்கிய காற்றாடியாய் கிழிந்தன.

''எதற்கு ராம்... காலம் கடந்து என்னப் பேசி என்ன ஆகப்போகிறது? பேசப்பேச எனக்கு அபியை உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமென்கிற ஆசை தான் பெரிதாகும். விட்டு விடுங்கள்.''

ஆனால், அவளை விட அவன் தான் ரொம்ப தவித்துப் போயிருந்தான்.

எப்போதும் அவளைப் பற்றிய எண்ணங்களே சுழன்றடித்தன.

''ஏதோ காரணங்களால் அவளை ஒதுக்கினேன். ஆனால், என் சத்யாவை நான் நேசித்தது, நேசிப்பது நிஜம் தானே? அனாதையாய் என் பிரியமானவள் சேவை மையத்தில் வாழ்வதா? என்ன செய்யப்போகிறேன்? கண்டிப்பாய் நான் இழைத்த தீங்குகளுக்கு பிராயச்சித்தம் தேடியே ஆக வேண்டும்.

அடுத்த இரண்டாவது நாளே... கஸ்தூரிபாய் சேவை மையத்தின் வாசலில் காத்திருந்தான்.

வாட்ச்மேன் மூலம் தகவல் போக, பதைப்புடன் வந்தாள் சத்யா.

''வா... சத்யா!''

''என்னங்க இது... இங்கேயே வந்துட்டீங்க?''

''நான் உன்கிட்டேப் பேசியே ஆகணும் சத்யா. நீ என்கிட்டே பேசற வரை நான் இப்படி வந்துக்கிட்டே தான் இருப்பேன்! சிறுபிள்ளையைப் போல் பேசினான்.

சத்யாவிற்கு ஆச்சர்யம் ஒரு பக்கம், சங்கடம் ஒரு பக்கம்.

காதலில் கட்டுண்டிருந்த போது ராமிடம் பார்த்த அதே சிறுபிள்ளைத்தன பிடிவாதத்தை இப்போது மறுபடியும் பார்க்கிறாள் பல வருடங்கள் கழித்து,

''எல்லாம் இழந்து பற்றிக் கொள்ள ஒரு பிடிமானமும் இன்றி தவித்தவளுக்கு கைப்பற்றி அழைத்து வந்து தங்க ஒரு கூரையைத் தந்தவள் லலிதாம்மா. இவன் இப்படி வாசலிலும், மார்க்கெட்டிலும் சந்தித்துப் பேசுவதை தவறாக எண்ணிக் கொண்டால்? அந்த சங்கடம் வேறு.

''சரி... சொல்லுங்க....என்ன பேசணும் உங்களுக்கு? சீக்கிரம் சொல்லிட்டுப் போங்க.!''

''தான் உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேனா சத்யா?''

''....?!'' சிரிப்பு தான் வந்தது.

''சொல்லு சத்யா!''

''கேட்கறதுக்கு முன்னாடி யோசிக்கிட்டு கேள்விகேளுங்க. மெண்டல் ஹாஸ்பிடல்ல இருந்து வந்தவக்கிட்டே கேட்கலாமா இப்படியொரு கேள்வி?''

''ஸாரி சத்யா... எல்லாம் என்னால தான். நம்பி வந்த உன்னை...''


''ஒரு நிமிஷம்!''

''....?!''

''தயவு செய்து பழைய விஷயங்கள் பேச வேண்டாம்.''

''அது தானே சத்யா என்னை உறுத்திக் கிட்டு இருக்கு.''





''மறக்க முயற்சிப் பண்ணுங்க!''

''முடியல சத்யா. சொல்லப் போனா இப்ப தான் அதிகமா நினைவிற்கு வருது.''

''அது உங்களுக்கு மட்டுமல்ல... எனக்கும் ஆரோக்கியமான விஷயமல்ல...!''

''ஆனா, பேசணும் சத்யா. மனசுக்குள்ளே பொங்கிட்டு இருக்கிறதெல்லாம் வெளியில் வந்தால் தான் எனக்கு நிம்மதி. என் சந்தோஷமெல்லாம் உன்னோடயே போய்டுச்சுன்னா நம்புவியா? ஆனா, அது தான் உண்மை!''

''....?''

''உனக்கு நான் செய்தது மிகப்பெரிய துரோகம். எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போனேன். சுயமா எடுத்த முடிவல்ல... கடைசி நேரத்திலே எங்கம்மா நிம்மதியா சாகவே தெரியுமா?''

''ப்ளீஸ்... இங்கிருந்து போய்டுங்க. உங்க ஸ்டேட்டஸுக்கு நீங்க இங்கே நின்னுக்கிட்டு பேசறது. சரியாவராது. நா... நான்... இங்கே... இந்த மரத்தில் ஒண்டி வாழ்ந்துட்டு இருக்கிற நூத்துக்கணக்கான பறவைகள்ல நானும் ஒருத்தி. அதுக்கும் வேட்டு வச்சிடாதீங்க!

''ப்ளீஸ்...'' கை கூப்பினாள்.

ஹரிராம் அவளையே சில கணங்கள் பார்த்தவன். ஒண்ணும் பேசாமல் காரை நோக்கிப் போனான்.

★ ★ ★

பத்து நாட்களாக ஹரிராம் அவளைப் பார்க்க வராதது சத்யாவிற்கு ஒரு புறம் நிம்மதியாய் இருந்தாலும், ஏனோ மனசு அவன் வர வேண்டும் என்று முரண்டுப் பிடித்தது.

ஆனால், அந்த பத்து நாட்களும் ஹேமாவிற்கும், ஹரிக்கும் பிரச்சனை அதிகமாயிருந்ததும், அதற்கு நான் தான் காரணம் என்று அவளுக்குத் தெரியாது.

உறக்கத்தில் ஒரு நாள் ஹரி. ''சத்யா... சத்யா நான் உனக்கு துரோகம் பண்ணிட்டேன் சத்யா'' என்று உளற.

அப்போதே எழுப்பி சண்டைப் போட்டாள் ஹேமா.

''அதெப்படி அவள் நினைப்பு உங்களுக்கு வரலாம்? அப்ப...

எனக்குத் தெரியாமல் மெண்டல் ஹாஸ்பிடலுக்குப் போய் அவளைப் பார்த்துட்டு வர்றீங்க. அப்படித்தானே? என்று சந்தேகப்பட்டாள்.

அதன் பிறகு தொட்டதற்கெல்லாம் கோபப்பட்டாள், சந்தேகப்பட்டாள். பிரச்சனை வலுத்தது.

சத்யா... சமையல் கூடத்தில் காய்கறிகளை சரி பார்த்து எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''சத்யா... மேடம் உங்களைக் கூப்பிடறாங்க!''

உதவியாளர் பெண் அழைக்க... ''இதோ வந்துட்டேன்'' என்று உடனே கிளம்பினாள்.

''அம்மா!'' என்று அவர் முன்னே போய் நின்றாள்.



''வாம்மா சத்யா... வேலை முடிஞ்சுதா?''

''முடிச்சிட்டேன்ம்மா!''

''அந்த ரூம்ல உனக்காக, அபிலாஷோட அப்பா காத்துக்கிட்டிருக்கார்.... போய்ப்பேசு!''

''அ...ம்...மா!'' என்றாள் அதிர்வில் ஓரடிப்பின்வாங்கி.

''போம்மா... நானும் பேசினேன். அவரும் மனசு விட்டுப் பேசினார். தன் தவறுகளுக்கு நிஜமாகவே வருந்தறார். நீ வாழ்க்கையில் படக்கூடாத அவமானங்களையும், கஷ்டங்களையும் பட்டவ, அதற்கெல்லாம் ஆறுதலா கடவுள் உனக்கு ஏதோ நல்லது செய்யப் போறார்னேத் தோணுது. போ...போய்ப்பேசு... ஆல் த பெஸ்ட்!''

உள்ளே வந்தவளைக் கண்டதும் 'ச...த்...யா!' என்று நெகிழ்ந்தான்.

''உட்கார் சத்யா.''

அமர்ந்தாள்.

''என்னடா... சொல்லச் சொல்ல திரும்ப வர்றானேன்னுப் பார்க்கறியா? இனி மேல் வரமாட்டேன்...!''

''....?''

''நீ இங்கே இருந்தால் தானே வர்றதுக்கு? உன்னை நான் அழைச்சிட்டுப் போகவே வந்தேன்!''

நெற்றி சுருங்கியது.

''ஆச்சர்யமாயிருக்கா சத்யா? எனக்கும் ஹேமாவுக்கும் பிரச்சனை அதிகமாகிட்டேப் போகுது'' என்றவன் நடந்தவைகளை சுருக்கமாகச் சொன்னான்.

உன் பேரைச் சொன்னாலே பேய் மாதிரி ஆடறா. அதெப்படி மறந்துட முடியும் சத்யா? உன்னை உருகி உருகி காதலிச்சி, ஆசை ஆசையாய் கல்யாணம் பண்ணிக்கிட்டவன். ஏதோ உன்னை இப்ப பார்த்ததால தான் இப்படியெல்லாம் பேசறதா நினைச்சிடாதே! உன்னைப் பிரிஞ்ச நாள் முதலா உன்னோட சேர்ந்து வாழணும்னு தான் ஆசைப்பட்டேன். அபிக்காக தானே இத்தனை அவஸ்தையும்பட்டே? அவன் உன் பிள்ளை. உன்கிட்டயே ஒப்படைச்சிடறேன். ஹேமாவை டைவர்ஸ் பண்ணப்போகி

''புது மருமகள் எப்படி இருக்கா?''

''ஆத்துக்காரரோட பரபரன்னு 'பரம்பரா' கட்டிண்டு ஸ்கூட்டரில் பறக்கறா. பெட்ரூமில் எச்.பி.ஓ.வில் 'ஏ' பாக்கறா. என்னைக் கண்ணால பொசுக்கறா. ஃபாஸ்ட் ஃபுட்டை மொக்கறா!''

-எஸ்.குருமூர்த்தி, தருமபுரி.



றேன்.'

''பண்ணி....''

''நாம சேர்ந்து வாழலாம் சத்யா!''

''....?''

''என்ன சத்யா அமைதியாய்ட்டே?''

''ஒரே ஒரு கேள்வி...''

''கேளும்மா...!''

''நா... நான் தப்பானவள்னு தானே என்னை ஒதுக்கி வச்சீங்க. இப்ப மட்டும்...''

''ஸாரி சத்யா. நீ எப்படிப்பட்டவள்னு எனக்குத் தெரியும். அம்மாவுக்காக நான் மனசாட்சியில்லாம நடந்துக்கிட்டேன்.''

''தாங்க்ஸ்ங்க... இது போதும்....!''

''நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலியே! நாம புதுசா வாழ்க்கைய ஆரம்பிக்கலாம் சத்யா!''

''அப்பவும் சரி அவசரப்பட்டு முடிவெடுத்தீங்க. இப்பவும் அதே மாதிரி அவசரப்படாதீங்க.''

''அவசரப்படலே சத்யா. சட்டம் பிரிச்சாலும் நீயும், நானும் புருஷன், பொண்டாட்டி தான். இழந்ததுக்கெல்லாம் சேர்த்துவச்சு உனக்கு சந்தோஷத்தைத் தரணும்னு ஆசைப்படறேன்''.

''....?''

''சொல்லு சத்யா...''

''எனக்கு மூணு நாள் டைம் தர முடியுமா... யோசிக்கணும்''

''யோசிக்கணுமா?''

''ஆமாம்!''

''சரி!''

''ஆனா, அது வரைக்கும் என்னைப் பார்க்க வராதீங்க.''

சற்று நிதானித்து 'சரி' என்றான்.

அடுத்த நாள்!

பெட்டியுடன் லலிதாம்மாவின் முன் வந்து நின்றாள் சத்யா.

''உன் முடிவுல மாற்றமே இல்லையா சத்யா?''

''இல்லேம்மா... இந்த முடிவு தான் சரி. இல்லேன்னா இன்னொரு சத்யா உருவாகிடுவா!''

''என்னம்மா சொல்றே?''

''நான் யாரையும் குற்றமோ, குறையோ சொல்லலே. ராமோட பார்வையில் அவர் செய்யறது மனசாட்சிப்படி நியாயமாத் தெரியலாம். தப்பே செய்யாத நான் இவ்வளவு மோசமான தண்டனையை அனுபவிச்சது கண்டிப்பா அவரை உறுத்தவே செய்யும். அதே சமயம் ஹேமா பக்கமும் நியாயமிருக்கே? புருஷனை எந்த மனைவி தான் விட்டுக்குடுப்பா? இப்ப முழு உரிமையும் ஹேமாவுக்கு தானே? அவளோட அன்புல எந்தப் பாசாங்கும் இல்லே. என் பிள்ளைய அவ இடத்துல வேற யார் வந்திருந்தாலும் ஹேமா அளவுக்கு அவ்வளவு பாசமா பார்த்துக்க முடியாது. அவளுக்கு துரோகம் பண்றது தப்பில்லையா?''



''நீ சொல்றது சரி தான்... ஆனா நீ பெத்த பிள்ளைய திருட்டுத்தனமா பார்க்க வேண்டிய அவசியமில்லையே. எதுக்காக கோர்ட்டு படியேறி போராடினே... உன் பிள்ளைக்காக தானே? அன்னைக்கு பறிச்சுக்கிட்டுப் போன உன் புருஷனே திரும்ப உன் கிட்ட ஒப்படைக்கிறேன் என்கிறார். நீ வேணாங்கறது தான் ஆச்சர்யமாயிருக்கு.''

''பெத்தப் பிள்ளைய யாராவது வேண்டாம்னு சொல்லுவாங்களாம்மா? என் உயிர், உலகம் எல்லாமே அபிலாஷ் தானே? நான் மனநிலை பாதிக்கப்பட்டு கிடந்தப்பக்கூட என் பிள்ளையத் தவிர வேறெந்த நினைவும் இல்லையே! அப்படிப்பட்ட பிள்ளைய விட்டுத்தர்றேன்னா... இன்னொரு சத்யா உருவாகிடக்கூடாதில்லையா?''

''....?''

''ஹேமா அபிலாஷ் மேல உயிரையே வச்சிருக்கா. என் பாசத்துல எந்த வகையிலேயும் குறைஞ்சதல்ல அவ பாசம்? அவனுக்காகவே தானொரு குழந்தையைப்பெத்துக்கல. அப்படிப்பட்ட தாயை ஏமாத்த எனக்கு மனசு வரலேம்மா.

அப்படிப் பறிச்சுக்கிட்டா என்னை விட மோசமா பாதிக்கப்படுவா! புதுசா ஒரு அம்மா வந்து, அபி உன்னை பெத்த அம்மா நான்தான்டான்னு குழப்ப மனசு வரலே. என் பிள்ளைய ஹேமா சந்தோஷமா வச்சிருப்பா. அந்த நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு.''

''ச..த்..யா!''

'புருஷன் பொண்டாட்டி சண்டை விடிஞ்சா காணாமப்போய்டும். அப்படி முடியாம பூதாகரமா பெருசாகுதுன்னா... அதுக்கு யாராவது காரணமாயிருப்பாங்க. இங்கே எனக்கேத் தெரியாம நான் தான் காரணமாயிருக்கேன்.

நான் இங்கே இருந்தா அவர் என்னைப் பார்க்க வருவார். மனசு ஊசலாடும். குற்ற உணர்வு வதைக்கும். நான் சுத்தமானவள்னு அவர் நினைச்சதேப் போதும். நான் மறுபடி சேலத்துக்கேப் போய்டறது தான் எல்லாருக்கும் நல்லது. என்ன ஒரு வித்தியாசம்? அஞ்சு வருஷம் முன்னாடி பைத்தியமாப் போனேன். இப்ப வேலைக்கான பொறுப்பை ஏத்துக்கப் போறேன்!''

''உன்னை அங்கே அனுப்ப மனசே இல்லை சத்யா. உன் பிடிவாதம்... என்னை தலையாட்ட வைக்குது!''

''எனக்கும் உங்களை விட்டுப்போக, மனசில்லேதாம்மா. ஆனா, இங்கேயிருந்தா... ஒரு அழகானக் கூட்டை கலைக்கற மாதிரி ஆகிடும்.''

''ராம் வந்தா நான் என்ன சொல்லட்டும்?''

''இந்த கடிதத்திலே எல்லாமே விளக்கமா எழுதியிருக்கிறேன். அவர் புத்திசாலி. வருத்தப்பட்டாலும், என்னை புரிஞ்சுப்பார். ஜீரணிச்சுப்பார். ஆனா, நான் இருக்கிற இடம் மட்டும் அவருக்குத் தெரியாம... நீங்க தான் பார்த்துக்கணும்.'' என்றவள் ஒரு கவரை நீட்டினாள்.

பெருமூச்சுடன் வாங்கிக் கொண்டார் லலிதாம்மா.

அவள் சேலம் செல்ல கார் ஏற்பாடு செய்திருந்தார்.

காரில் ஏறி அமர்ந்த சத்யா தன்னை மீறி உடைப்பெடுத்த கண்ணீ

ரைத் துடைத்தபடி கையடைத்தாள். கார் புறப்பட்டது.

★ ★ ★

ஆவலுடன் வந்த ராமிடம் லலிதாம்மா அந்த கடிதத்தை ஒப்படைத்து விட்டு தன் அறைக்குச் சென்று விட்டார்.

படிக்க படிக்க... இதயம் கனத்துப் போனது ஹரிராமுக்கு.

'ஏன் இப்படிப் பண்ணிட்டே சத்யா? மேலும், மேலும் என்னை தண்டிக்கிறியா? இனி உங்கள் பார்வையிலேயே பட மாட்டேன் என்று எழுதியிருக்கிறாயே. ஹேமாவை நீ நினைத்துப் பார்க்கிறாய்: ஆனால் அவள்?

அவளுடன் சேர்ந்து வாழ்வது தான் உனக்கு நான் செய்யும் கைமாறா? வாழ்கிறேன். ரெட்டை வாழ்க்கை வாழ்கிறேன். உன்னை மனசு முழுக்க நிரப்பி வச்சுக்கிட்டு அவ கூட வாழத் தான் போகிறேன்.

ஆனா, நான் உன் மேல வச்சிருக்கிற பிரியத்தை உணர்ந்திருந்தா இப்படியொரு கடிதம் எழுதியிருப்பியா? என் மனசை உடைச்சிட்டுப் போய்ட்டியே சத்யா?

எனக்கு நீ வேணும் சத்யா. பிரியமானவளே... எனக்கு உன் பிரியம் வேணும். தருவாயா? நீ சொன்னதும் நான் உன்னை மறந்துடணுமா? அதெப்படி மறப்பேன்? நான் உன்னை மறுபடி சந்திப்பேன்ற நம்பிக்கை நிறைய இருக்கு. அது எத்தனை வருஷமானாலும் சரி... நாம கண்டிப்பா சந்திப்போம். அப்ப நீ என் நேசத்தை புரிஞ்சுப்பே. அப்ப உன் கண்ல இருந்து... ஒரு சொட்டு கண்ணீர் வழியுமே! அது தான் நீ எனக்குத் தர்ற சன்மானம். அந்த புரிதலுக்காக, நேசத்துக்காக காத்திருப்பேன் சத்யா!

கடிதத்தை மடித்து பாக்கெட்டில் வைத்தவன், நாசூக்காய் கண்களையும் துடைத்துக் கொண்டு காரில் ஏறினான்.

ஜன்னல் வழியே அவனையே பார்த்துக் கொண்டிருந்த லலிதாம்மாவின் நெஞ்சமும் விம்மியது.

**-முற்றும்-**

''மனைவிக்கு ஐயாயிரம் ரூபாய்ல புடவையும், அம்மாவுக்கு ஐயாயிரம் ரூபாய்ல புடவையும் எடுத்ததால வீட்ல சண்டையா? எப்படி?''

''வேலைக்காரிக்கு பத்தாயிரம் ரூபாய்ல புடவை எடுத்த விஷயம் தெரிஞ்சு போச்சே!''

''...?...?...?''

-ஜி.எம்.சண்முகராஜ், கோவை.

